வேத கணபதி

38





ஸ்ரீ அருள்சக்தி நாகராஜன்

3

உ

ஸ்ரீகுருப்யோ நமஃ
ஸ்ரீமஹாகணபதயே நமஃ
ஸ்ரீபரதேவதாயை நமஃ



வேத கணபதி



தொகுத்தவர்
ஸ்ரீ அருள்சக்தி நாகராஜன்
நிறுவனர்—ருதம்பரா ஞான ஸபா
புது டில்லி

விலை ரூ. 50-00

உ

ஸ்ரீ குருப்யோ நம:

வேதகணபதி

நூன்முகம்:

ஜய்ஸ்ரீ குருமண்டலி!

ஞானகுரு தேசிகனைப் போற்றுகின்றேன்:
நாடனைத்தும் தானாவான் நலிவிலாதான்
மோனகுரு திருவருளாற் பிறப்புமாறி
முற்றிலும் நாம் அமரநிலை சூழ்ந்துவிட்டோம்.

- என்று பாரதி பாடினான். இதுபோல் நான் ஸத்குருவினால் ஆட்கொள்ளப்பட்டு பிறப்புமாறி, தன்யனாகி, அறிஞருலகில் ஒரு எறும்பாய் உலவுகிறேன். எறும்பு சிறிது சிறிதாக தனக்காக சேமிக்கும். அதுபோல் சேமித்தாலும் அது பிறருக்கும் உபயோகமாவதில் பெருமை கொள்கிறேன். எல்லாம்வல்ல ஸ்ரீ குருவருள் என்னையும் ஒரு பொருளாக்கி ஸ்ரீ மஹாகணபதியின் பரம்பொருட் தத்துவத்தை இதில் எழுத வைத்துள்ளது. அதன் விவரம் இதோ!

1. ஸ்ரீ கணேசாதர்வசீர்ஷோபநிஷத் - இதற்கான விரிவான தமிழுரை. இது எனது நண்பரும் தத்தப்ரஸாதம் மாத இதழ் ஆசிரியருமான ஸ்ரீமான் சந்த்ரமௌலி அவர்களின் உதவி மற்றும் தூண்டுகோலினால் எழுதப்பட்டு, மேற்படி இதழில் சென்ற 1993ல் தொடராக வெளிவந்தது. அத்துடன் சிலபுதிய தத்வங்களும் சேர்ந்துள்ளது.

2. ஸ்ரீ கணேசமூலமந்த்ர பதமாலா - இது எனது குருநாதர் பூஜ்யஸ்ரீ அனந்தாநந்தநாதர் (ப்ரஹ்மஸ்ரீ C.V. ஸ்வாமி சாஸ்திரிகள்) அவர்கள் யாத்தது. இதற்கு தெலுங்கில் உள்ள விரிவான உரை மூலமாக உதவியவர் சென்னை எனது தீக்ஷாஜ்யேஷ்டரான ஸ்ரீமான் ஸ்ரீ மஹாதேவானந்தஜீ அவர்கள் மற்ற கருத்துக்கள் ஸ்ரீ குருவருள்.

3. ஸ்ரீவக்ரதுண்டஷடக்ஷரி- இதுவும் எனது குருநாதர் பூஜ்யஸ்ரீ ஆனந்தா நந்தநாதர் (ப்ரஹ்மஸ்ரீ C.V.ஸ்வாமி சாஸ்த்ரிகள்) அவர்கள் யாத்தது. இதன் மொழிப்புரைக்கு உதவியவர் புதுடில்லி நண்பர் ஸ்ரீ கண்ணன் என்கிற ஸ்ரீ ராமகிருஷ்ணனின் ஸஹோதரி ஸ்ரீமதி பவானி என்பவர்.

4. ஸ்ரீமஹாகணபதி சதுராவ்ருத்தி தர்ப்பணம்-
5. ஸ்ரீமஹாகணபதி லகு ஆவரண பூஜை-
6. லகு ஸ்ரீமஹாகணபதி ஹோமம் - இந்த மூன்றுமே 1993ல் வெளிவந்த ஸ்ரீ மஹாகணபதி மந்த்ர வழிபாடு என்ற நூலில் உள்ளதே. ஆனால் ஹோமம் மிக லகுவாக தினசரி ஒரு ஸாதகனால் செய்ய ஸௌகரியமான என்தனக்கருளியது.

இந்நூலுக்கு உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி. பண்டிதனல்லா பாமரனுக்கும் பரம்பொருள் தத்துவத்தினை அறிவிக்க அந்தப்ரவணப்பெருமான் விநாயகர் விரும்பிய காரணமே இந்த நூலின் உதயம். ஆன்றோர் இதில் பிழையிருக்குமானால் பொறுத்து நூலினை ஏற்று பெருமைப்படுத்த வேண்டுகிறேன்.

இதுவரை எங்கள் ருதம்பரா ஞான ஸபா மூலம் நூல்களை வெளியிட்டு வந்தோம். இதுமுதல் இந்த பணியினை கும்பகோணம் மார்க்கண்டேயா புக் டெப்போ உரிமையாளரும் எனது சீடருமான ஸ்ரீ ஜெ.கல்யாணஸுந்தரம் ஏற்றுக் கொண்டுள்ளார். இந்த பெரும்பணியை சிறப்பாக நிறைவேற்றி, மேன்மேலும் ஆன்மீக நூல்களையும் வெளியிட்டு, ச்ரேயஸ் அடைய பராசக்தி குருமண்டலத்தை வேண்டுகிறேன்.

ருதம்பரா ஞான ஸபா — தங்கள் விதேயன்
புது டில்லி — அருள்சக்தி நாகராஜன்

உ

ஸ்ரீகுருப்யோ நம:

வேதகணபதி

பதிப்பாளர் முன்னுரை

ஜய்ஸ்ரீ குருமண்டலி! ஸ்ரீஸத்குருவுக்கு நமஸ்காரம்.

உலகில் நாம் செய்யும் செயல்களுக்கு முதலில் வணங்கும் தெய்வமாக ஸ்ரீமஹாகணபதி விளங்குகிறார். அவருக்காக பெரிய பெரிய கோவில்கள் இருந்த போதிலும் நதிக்கரை, மரத்தடி, தெருமுனை எனவும் வீற்றிருந்து அருள் பாலிக்கும் தெய்வம் அவர். வேதமுதற்கடவுள் என்ற நிலையில் அவரை வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள்பரம் பொருளாகவே விளக்கியுள்ளன. இவ்வாறான ஸ்ரீமஹா கணபதியை இந்த நூலில் பலவழிகளில் வழிபட ஹேதுவாக சதுராவ்ருத்தி தர்ப்பணம், பூஜை, ஹோமம், துதிகள், உபநிஷத் பாராயணம் என்றவாறு எனது ஸ்ரீகுருநாதரால் விளக்கமான அர்த்தத்துடன் தொகுக்கப் பட்டுள்ளது.

முக்கியமாக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்!

இந்த நூலில் உள்ள சதுராவ்ருத்தி தர்ப்பணம், ஆவரண பூஜை, ஹோமம் முதலானவற்றை ஒரு ஸத்குருவிடமிருந்து ஸ்ரீமஹாகணபதி மஹாமந்த்ரத்தை உபதேசமாகப் பெற்று, அதன்பின் அவர் முழுஅனுமதியுடன் தான் செய்யவேண்டும் என்ற நியதியை கட்டாயம் ஸாதகர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பது என் குருநாதர் விருப்பம்.

இந்த சதுராவ்ருத்தி தர்ப்பணம் நான் செய்ய தொடங்கிய காலத்தில்தான் என் பிறவிப்பயனால் எனக்கு நல்ல ஸத்குரு கிடைத்தார். இதை ஏன் எழுதுகிறேன் என்றால் இந்த சதுராவ்ருத்தி தர்ப்பணம் உலகியல் காமனைகளை மட்டுமே இது பூர்த்தி செய்யும் என்பதில்லை. மஹாஜ்ஞானத்தையே அருளவல்லது என்பதைதெரிவித்துக் கொள்கிறேன்.

ராமாயணத்தில் அணைகட்டிய அணிலின் தொண்டு போல ஸ்ரீகுருநாதரால் எழுதப்படும் நூல்கள் வெளியீடே எனது பணி என்பதை மட்டுமே இங்கு குறிப்பிட்டுக் கொள்கிறேன். இந்த பணியில் பெருமைப் படுத்திய ஸ்ரீகுருநாதருக்கு ப்ரணாமங்கள்.

நமஸ்காரம்.

ஸ்ரீமார்கண்டேயா புக் டெப்போ, ஜெ.கல்யாணஸுந்தரம்
கும்பகோணம்.
31-10-2004

பொருளடக்கம்

உ

ஸ்ரீகுருப்யோ நமஃ
ஸ்ரீமஹாகணபதயே நமஃ
ஸ்ரீபரதேவதாயை நமஃ



1. ஸ்ரீ கணேசாதர்வசீர்ஷோபநிஷத்

விளக்கவுரை – ஸ்ரீஅருள்சக்தி நாகராஜன்

ருதம்பரா ஞான ஸபா நிறுவனர்– புது டில்லி

ஸ்ரீ கணேச அதர்வசிரஸ் என்னும் இந்த உபநிஷத்து அதர்வண வேதத்திலுள்ளது. அதர்வா என்ற முனிவர் மோக்ஷத்தை நாடி நிற்கும் ஜீவாத்மாக்களின்பால் கொண்டுள்ள கருணை காரணமாக தன்னுள்ளொளியில் பளிச்சிட்டதும் ஆன்மாவைப் பற்றியதுமான இவ்வைதிகப் ப்ரகரணத்தை தான் கண்டவாறே உபதேசித்துள்ளார். கர்மா, பக்தி, உபாஸனை, ஞானம் என இவ்வழியில் ஜீவனை சிவமாக்கும் அத்வைதப் பெருநிலையாம் கைவல்யம் கைகூடும் எனில் அந்த வழியில் நிச்சயமாக இட்டுச் செல்ல வல்லது இந்த உபநிஷத்து.

இதற்கு முந்நாட்களில் பலர் உரைகண்டிருக்கின்றனர். ஆதியில் இருந்த உரை நீண்டும் எளிதில் புரிந்துகொள்ள இயலாமலும் இருந்ததாகவும், அதற்கு தான் ஸுலபமான, எளிய பொருளில் ஸுதா என்ற உரையை செய்ததாக கி.பி.1868ல் கோதாவரி நதிக்கரை நாஸிக் க்ஷேத்ர வாஸியானவரும், வித்யாபாரங்கதருமான ஸ்ரீமான் ஸ்ரீதர சாஸ்த்ரி என்பவர் கூறுகிறார். இவரது உரையே – அடியேனின் இந்த கன்னி முயற்சிக்கு பெரிதும் உறுதுணை. இதில் கண்ட வ்யாகரணம் சம்பந்தமான பதங்கள் எல்லாம் அவரையே சாரும். மற்ற உபநிஷத் வாக்கியங்களும் இதற்கு துணை செய்கின்றன. மற்றவை குரு க்ருபையின் பரிணாமம்.

ஸங்குஞ்சிதமான அறிவைக் கொண்டு வேத கடலை நீந்த முடியுமா? பிழைகளும் தவறுகளும் மலிந்திருக்கும். கற்றறிந்த ஆன்றோர்கள் அதனை பொறுத்து அடியேனை ஊக்கப்படுத்த வேணும். கணபதியின் மலர்ப்பதங்கள் நமக்கு நல்வழிகாட்டுமாக என ப்ரார்த்திப்போம். இனி உபநிஷத்தில் உலாச்செல்வோம்.

ஸ்ரீ கணேசாதர்வசீர்ஷோபநிஷத்

ஓம் பத்ரம் கர்ணேபிஃ ச்ருணுயாம தேவாஃ பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ராஃ ஸ்திரைரங்கைஸ் துஷ்டுவா(கும்) ஸஸ்தனூபிர் வ்யசேம தேவஹிதம் யதாயுஃ ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தச்ரவாஃ ஸ்வஸ்தி நஃ பூஷா விச்வவேதாஃ ஸ்வஸ்திநஸ்தார்க்ஷ்யோ அரிஷ்ட நேமிஃ ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது ஓம் சாந்திஃ சாந்திஃ சாந்திஃ

அத கணேசாதர்வ சீர்ஷம் வ்யாக்யாஸ்யாமஃ
ஓம் நமஸ்தே கணபதயே

த்வமேவ ப்ரத்யக்ஷம் தத்வம, ஸித்வமேவ கேவலம் கர்த்தாஸி, த்வமேவ கேவலம் தர்த்தாஸி, த்வமேவ கேவலம் ஹர்த்தாஸி, த்வமேவ ஸர்வம் கல்விதம் ப்ரஹ்மாஸி, த்வம் ஸாக்ஷாத் ஆத்மாஸி நித்யம்
ருதம் வச்மி ஸத்யம் வச்மி —2

அவ த்வம்மாம், அவ வக்தாரம், அவ ஶ்ரோதாரம், அவ தாதாரம், அவ தாதாரம், அவாநூசானம், அவ ஶிஷ்யம், அவ பஶ்சாதாத், அவ புரஸ்தாத், அவோத்தராதாத், அவ தக்ஷிணாதாத், அவ ஶோர்த்வாதாத் , அவாதராதாத், ஸர்வதோமாம், பாஹி பாஹி ஸமந்தாத் —3

த்வம் வாங்மயஃ, த்வம் சின்மயஃ, த்வம் ஆனந்தமயஃ, த்வம் ப்ரஹ்மமயஃ, த்வம் ஸச்சிதாநந்தா த்விதீயோ (அ)ஸி, த்வம் ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி, த்வம் ஞானமயோ விக்ஞானமயோ (அ)ஸி —4

ஸர்வம் ஜகதிதம் த்வத்தோ ஜாயதே, ஸர்வம் ஜகதிதம் த்வத்தஸ் திஷ்டதி, ஸர்வம் ஜகதிதம் த்வயி லயமேஷ்யதி, ஸர்வம் ஜகதிதம் த்வயி ப்ரத்யேதி, த்வம் பூமிஃ ஆபஃ அநலஃ அநிலஃ நபஃ த்வம் சத்வாரி வாக் பதானி —5

த்வம் குணத்ரயாதீதஃ, (த்வம் அவஸ்த்தாத்ரயா தீதஃ – சில பாடங்களில் காணப்படுகிறது.),
த்வம் தேஹத்ரயா தீதஃ
த்வம் காலத்ரயா தீதஃ
த்வம் மூலாதாரஸ்திதோ(அ)ஸிநித்யம்
த்வம் சக்தி த்ரயாத்மகஃ
த்வம் யோகினோ த்யாயந்தி நித்யம்
த்வம் ப்ரஹ்மா, த்வம் விஷ்ணுஃ
த்வம் ருத்ரஃ த்வம் இந்தரஃ த்வம் அக்னிஃ
த்வம் வாயுஃ த்வம் ஸூர்யஃ த்வம் சந்த்ரமாஃ
த்வம் ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம் –6

க³ணாதிம் பூர்வமுச்சார்ய, வர்ணாதிம் ததனந்தரம்
அனுஸ்வாரப் பரதரஃ அர்த்தேந்து லஸிதம்
தாரேண ருத்தம் ஏதத்தவ மநுஸ்வரூபம்
க³காரஃ பூர்வரூபம் அ காரோ மத்யம ரூபம்
அனுஸ்வார ச் சாந்த்ய ரூபம் பிந்து ருத்தர ரூபம்
நாதஃ ஸந்தானம் ஸம்ஹிதா ஸந்திஃ
ஸைஷா கணேச வித்யா க³ ணக ரிஷிஃ நிச்ருத் கா³யத்ரீ சந்தஃ
க³ணபதிர் தேவதா ஓம் க³ம் ஓம் (கணபதயே நமஃ) –7

ஏகதந்தாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி ப்ரசோதயாத் –8

ஏகதந்தம் சதுர் ஹஸ்தம் பாசமங்குச தாரிணம்
ரதம் ச வரதம் ஹஸ்தைஃ பிப்ராணம் மூஷகத்வஜம்
ரக்தம் லம்போதரம் ஸூர்ப கர்ணகம் ரக்த வாஸஸம்
ரக்த கந்தானுலிப்தாங்கம் ரக்தபுஷ்பைஃ ஸுபூஜிதம்
பக்தானுகம்பினம் தேவம் ஜகத்காரண மச்யுதம்
ஆவிர்பூதம் ச ஸிருஷ்ட்யாதௌ ப்ரக்ருதேஃ புருஷாத் பதம்(பரம்)
ஏவம் த்யாயதியோ நித்யம் ஸ யோகீ யோகீனாம் வரஃ –9

நமோ வ்ராதபதயே நமோ கணபதயே நமஃ ப்ரதமபதயே
நமஸ்தே(அ)ஸ்து லம்போதராய ஏகதந்தாய விக்னநாஸினே
சிவஸுதாய ஶ்ரீவரத மூர்த்தயே (நமோ) நமஃ –10

ஏததர்வசீர்ஷம் யோ(அ)தீதே ஸ ப்ரஹ்ம பூயாய கல்பதே
ஸ ஸர்வதஃ ஸுகமேததே ஸ ஸர்வ விக்னைர்நபாத்யதே
ஸ பஞ்ச மஹாபாபாத் ப்ரமுச்யதே
ஸாயமதியானோ திவஸக்ருதம் பாபம் நாஶயதி
ப்ராதரதீயானோ ராத்ரீக்ருதம் பாபம் நாஶயதி
ஸாயம் ப்ராதஃ ப்ரயுஞ்ஜானோ அபாபோ பவதி
ஸர்வத்ராதீயானோ(அ) பவிக்னோ பவதி தர்மார்த்த
காம மோக்ஷம் ச விந்ததி இதமதர்வசீர்ஷமசிஷ்யாய
ந தேயம் யோ யதி மோஹாத் தாஸ்யதி ஸ பாபீயான் பவதி
ஸஹஸ்ரா வர்த்தநாத் யம் யம் காம மதீதே —11
தம் தமனேன ஸாதயேத்

அனேன கணபதிமபிக்ஷிஞ்சதி
ஸவாக்மீ பவதி சதுர்த்யாம (அ) னஶ்னன் ஜபதி
ஸவித்யாவான் பவதி இத்யதர்வண வாக்யம்
ப்ரஹ்மாத்யா சரணம் வித்யாத் ந பிபேதி கதாசனேதி —12

யோ தூர்வாங்குரைர் யஜதி ஸ வைச்ரவணோபமோ பவதி
யோ லாஜைர் யஜதி ஸ யஶோவான் பவதி ஸ மேதாவான் பவதி
யோ மோதக ஸஹஸ்ரேண யஜதி ஸ வாஞ்சித பலம்
அவாப்னோதி யஃ ஸாஜ்ய ஸமித் பிர் யஜதி ஸ ஸர்வம் லபதே —13
ஸ ஸர்வம் லபதே

அஷ்டௌ ப்ராஹ்மணான் ஸம்யக் க்ராஹயித்வா ஸூர்ய
வர்ச்சஸ்வீ பவதி ஸூர்ய க்ரஹே மஹா நத்யாம் ப்ரதிமா
ஸந்நிதௌ வா ஜப்த்வா ஸித்தமந்த்ரௌ பவதி மஹா விக்னாத்
ப்ரமுச்யதே மஹா தோஷாத் ப்ரமுச்யதே மஹா பாபாத் ப்ரமுச்யதே
ஸ ஸர்வவித் பவதி ஸ ஸர்வவித் பவதி ய ஏவம் வேத —14
இத்யுபநிஷத்

ஓம் ஸஹநாவவது ஸஹனௌபுனக்து ஸஹவீர்யம்
கரவாவஹை தேஜஸ்வினாவதீதமஸ்துமாவித்விஷாவஹைஃ
ஓம் ஶாந்திஃ ஶாந்திஃ ஶாந்திஃ

ஓம் நமஸ்தே கணபதயே ....

1-1. **ஓம்.** பொதுவாக உபநிஷத்துக்கள் தொடக்கத்தில் ப்ரணவமான **ஓம்** என்ற பதத்தை முதலாக வைத்து தொடங்குகின்றன. இதற்கு காரணம் ஆதிமுதலான வேதம் **ஓம்** என்றுதான் தொடங்குகிறது. எனவே வேதத்தின் அந்தமானதும், அதன் தாத்பர்யத்தை தெள்ளிதின் விளக்குவதுமான உபநிஷதங்கள் **ஓம்** என்று முதலில் சொல்வது தவறில்லைதானே.

ப்ரபஞ்ச ச்ருஷ்டி காரணம் **ஓம்.** ஸமஸ்த புவனங்களின் உற்பத்தி - ஸ்திதி லயமயமாக இருப்பது இங்கு **கணேச ப்ரஹ்மமே.** ஏனெனில் விச்வத்தை உற்பத்திசெய்து, பராமரித்து லயப்படுத்தும் மூர்த்தியாகத்தானே கணேசரை- அவருடைய த்யானஸ்லோகம் கூறுகிறது. எனவே ப்ரணவமாக இருக்கும் இந்த மஹாகணபதியை வேதம் **ஓம்** என்று கூறுகிறது. பாதஞ்ஜலயோக ஸூத்ரமும்- **ப்ரஹ்மம் ஓம்** என்ற வரி வடிவில் அமைந்திருக்கிறது என்று கூறுகிறது.

*தெய்வம் கண்களால் பார்க்கப்படுவதில்லை. மனமே தெய்வமாகிவிடும் நிலையில் அது உணரப்படுகிறது. அதை நாம் **ஓம்** என்ற பெயரில் சிந்தித்து அழைத்தால் எளிதில் ஸித்தி பெறலாம்.*
— என்று ஸ்மிருதியும் இயம்புகிறது. கணேசனும் ப்ரஹ்மமும் வெவ்வேறான இருவரல்ல. ப்ரஹ்மமேதான் கணேசன் என்றறிந்து கொள்க. இப்படிப்பட்ட உயர்ந்த அத்வைதநிலையை ரிக்வேதம் சொல்கிறது.
கணானாந்த்வா கணபதிகும் ஹவாமஹே கவிம்கவீனாம் உபமஸ்ரவஸ்தமம். ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பதே ஆன ச்ருண்வனூதிபி:ஸீதஸாதனம் —
என்று.

ஓம் என்று தொடங்கிய வேதத்தின் அந்தத்தில்இந்த உபநிஷதம் ஒரு பகுதியாக இருக்கிறது. மேலும் இது ஒரு ஸுதந்திரமான ப்ரகரணம் என்பதாலும் மிகச்சிறப்புடைய கணேச ப்ரஹ்ம வித்யையை இது ப்ரதிபாதிப்பதாலும் **ஓம்** என்று தொடங்குவதாக கொள்ளலாம். கச்சியப்பமுனிவர் கீழ்வருமாறு ப்ரணவத்தின் கூறுகளைக் கணபதிக்கே சொந்தமாக்குகிறார்.

அகரமென அறிவாகி உலகமெங்கும்
அமர்ந்தகர உகரமகரங்கள் தம்மால்
பகருமொரு முதலாகி வேறுமாகி
பல்வேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில்பொருள் நானிணையும் இடர்தீர்ந்தெய்த
போற்று நற்கருணை புரிந்தல்லார்க்கு
நிகரின் மறக்கருணை புரிந்தாண்டு கொள்ளும்
நிருமலனை கணபதியை நினைத்து வாழ்வாம்

அ+உ+ம் – இதுவே **ஓம்** என்றாகிறது. ஸ்ருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரம் என்றும், ப்ருஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்றும், ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்றும், ஸத்வம், ரஜஸ், தமஸ் என்றும் பலவிதங்களில் முக்கூட்டு ப்ரபஞ்சத்தை உருவாக்கும் ப்ரணவமே – கணபதிதான். வேதம் மங்களகரமானது. மேலும் அது **அபௌருஷேயம்.** எனவேதான் இந்த உபநிஷத் உலக வழக்கைக்கொண்டு **ஓம்** என்று தொடங்குவதாகக் கொள்ளலாம். **யோவேதாதௌ ஸ்வரஃ ப்ரோக்தஃ..........** என்று சாந்தோக்யம் ப்ரணவம் ஆரம்பார்த்தம் என்பதை ஸித்தாந்தம் செய்கிறது. அதர்வவேத கோபதப்ராஹ்மணமும் ***ஹ்ரஸ்வம் உதாத்தம், ஏகாக்ஷரம்*** என்று பேசுகிறது. இதுவரை உபநிஷத்தின் தொடக்கமான **ஓம்** என்ற ப்ரணவத்தின் பொருளை பலவிதமாகக் கண்டோம்.

(சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்பே சித்ர எழுத்துக்களாக இருந்த மொழியின் துவக்கத்தில் ஸ்வஸ்திக் குறியானது ப்ரணவமான ஓம் என்பதையே குறிக்கிறது என்று அருள்சக்தி தன் மஹாகணபதி மந்த்ர வழிபாடு என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.)

நமஸ்தே கணபதயே

1–2. இதில் **நம:** என்றால் நமஸ்கரிக்கிறேன், வணங்குகிறேன் என்று பொருள். **தே** என்ற பதத்துக்கு வேதங்களிலும், உலகத்திலும் பிரஸித்தமான என்று பொருள். **கணபதயே** கணங்களுக்கு அதிபதியான கணேச ப்ரஹ்மமே என்று பொருள். அதாவது ***ப்ரஸித்தமான கணபதிக்கு நமஸ்காரம்*** என்றாகிறது. இதனை சற்று விரிவாகப் பார்ப்போம்.

ந= (நான்) இல்லை, ம= ஜீவனானவன்

நான் ஜீவன் இல்லை. பரம்பொருள்தான் என்று பொருளாகும்.

மேலும் அர்ச்சனைகளில் நாமத்தைக் கூறி நமஸ்கரிக்கிறேன் (நம:) என்று கடைசியில் வருவது வழக்கம். ஆனால் இங்கு கணபதியின் நாமத்துக்கு முன்னால் ***நம:*** வருகிறது. இதனால் வேதங்களின் சிரோபாகமான, உபநிஷத் பிரதிபாத்யமான கணேச ப்ரஹ்மத்தை முதலில் நமஸ்கரித்து பிறகு பெயரைச் சொல்லி ஸம்போதனம் செய்கிறது. இதற்கு ப்ரமாணமாக யஜுர் வேதத்தில் ஸ்ரீருத்ரனை,

ஓம் நமஸ்தே ருத்ரமன்யவே
நமோ ஹிரண்ய பாஹவே
நம: ஸஹமானாய
நம: ஆவ்யாதினி
நமோ பவாய
நமோ ஜ்யேஷ்டாய
நமோ துந்துப்யாய நம: ஸோமாய

என்று வேத வழக்காக முதலில் நமஸ்கரிப்பதை நாம் காணலாம். அதனால்தான் இதிலும் ***நம:*** என்று முதலில் துவங்குகிறது.

நமஸ்காரம் என்றால் உடல், வாய், மனதினால் தன்னைவிட தெய்வம் எவ்வகையிலும் எந்நிலையிலும் எப்போதும் தனிச்சிறப்பு மிக்கது எனஉணர்ந்து போற்றுதலாகும். மேலும்உபாஸ்ய தேவதையின் மேன்மையையும் அதனை உபாஸிக்கும் உபாஸகனுடைய தாழ்மையையும் ***நம:***என்ற பதம்

அறிவிக்கிறது. ஆனால் இவ்வாறு கூறின் உபாஸ்ய தேவதையை தன்னைவிட பின்னமாக அன்னியமாகக் கருதி உபாஸனை செய்பவன் அக்ஞானியல்லவா, அவன் ஒருபோதும் ஆத்மஞானத்தை பெறமாட்டான், ஸம்ஸாரக் கடலைத் தாண்ட மாட்டான் என்று கூறும் உபநிஷதங்களின் கூற்றுக்கு முரண்படுகிறல்லவா? – எனின் அது உண்மைதான். ஸகல உபநிஷதங்களும் உபாஸ்ய– உபாஸக அபேதத்தைத்தான் உறுதி செய்கின்றன. இதுதான் அ ஹ ங் கி ர ஹ உபாஸனை எனப்படுகிறது. இதன்படி **நம:** என்ற பதம் உபாஸகனையும், **கணபதி** என்னும் பதம் உபாஸ்ய தேவதையையும் குறிக்கின்றது. நான்காம் வேற்றுமை உபாஸகஉபாஸ்ய அபேதத்தை உணர்த்துகிறது. எனவே **நமஸ்தே கணபதயே** என்பது உபாஸ்ய உபாஸக அபேதத்தையும் அதனால் ஜீவப்ரஹ்மைக்யத்தை உணர்த்தக் கூடிய மஹாவாக்ய ஸ்வருபமாகும் என்பதுதான் பரமதாத்பர்யம்.

அடுத்ததாக – ***கண*** என்றால் ஸமூகம், கூட்டம், தொகுப்பு என்று பொருள்படும். தேவர்களின் ஸேவகர்கள், அமானுஷமான சக்திபெற்ற பூதகணங்கள், ருத்ரனின் ப்ரதம கணங்கள் இவர்களின் தலைவன், ரக்ஷகன் – ***கணபதி.*** மேலும் ப்ரஹ்மா, விஷ்ணு, வஸு, ருத்ர, ஆதித்ய கணங்களின் பதி எனவும் பொருள்படும். இனி தத்வார்த்தம் பார்ப்போம். ***கண*** என்னும் பதம் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஆகாசாதி பௌதிக ஸகல ப்ரபஞ்சத்தையும் குறிக்கும். ஸ்ரீபாஸ்கரராயர் தன் கணேச ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் **கண** என்பதற்கு கீழ் வருமாறு கூறுகிறார்.

வியதாதி ப்ரபஞ்சஸ்ய ஸமூஹோ கண உச்யதே
ததாத்மகஸ் ததீ சஞ்சதேன தேவோ கணேச்வர:

ஆகாசாதி பாஞ்ச பௌதிக ஸமூஹமாகும் ஸகல ப்ரபஞ்சமும் ***கண*** என்பதற்கு பொருள். ப்ரபஞ்ச ஸ்வரூபமாயும், அதில் அந்தர்யாமியாயும் இருந்து அதை ஒளி விடச் செய்பவர் கணேச்வரர் எனப்பொருள். மேலும் கணம் என்பதற்கு, ***பரஸ்பர ஸா பேக்ஷாணாம் அனேக குலானாம் ஸாதுரனாம் ஸமுதாய:*** – என்று எல்லாவித சரீரங்களும், வஸ்துக்களும், காலங்களும், அவஸ்தைகளும், கணரூபமாக உள்ளன. எனவே இந்த கணங்களுக்கெல்லாம் அதிபதியாக இருப்பவர் கணபதியே.

மேலும், அஹமும், புறமும் – பிண்டமும், அண்டமும் – ஸ்தூல சரீரமும், விராட் புருஷனும் – என்று இதனைக் கொள்வோம். இப்போது அஹத்தைப் பற்றிய உலகங்கள் அன்ன ஸமூஹங்கள். அதாவது உண்ணப் படுபவை, உண்பவை என்றாகும். அஹத்துடன் தொடர்புள்ள யோக ஸமூஹங்களில் அண்டம் விராட் முதலியவை அடங்கும். எனவே இவற்றின் பதி கணபதி எனலாம். **கண** என்ற சொல்லில் க என்பது சொல்லாலும் சிந்தையாலும் அறியப்படுவதும் புலப்படுவதும் புலப்படாததுமான ப்ரபஞ்சம். ண என்பது சொல், சிந்தைக்கப்பால் ஸம்யோகா ரூபமானது. எனவே இந்த இரண்டு நிலைகளிலும் முறையே தோன்றிய தத்துவ ரூபமான ப்ரஹ்மம், மற்றும் நிரோதரூபமான ப்ரஹ்மம் **கண** என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன. மேற்கூறிய இருவித ப்ரஹ்ம கணங்களை இணைக்கச்செய்யும் தலைவர் **கணபதி**. எனவே இதுவரை **ஓம் நமஸ்தே கணபதயே** என்பதன் பொருளை விளங்கிக்கொண்ட நிலையில் இது ஜீவ ப்ரஹ்மைக்கியத்தை லக்ஷணையாக உணர்த்தும் மஹா வாக்யமேதான் கணபதியின் உண்மை வடிவம் என்பதைக் காணலாம்.

த்வமேவ ப்ரத்யக்ஷம் தத்வமஸி............

1–3. (ஹே மஹா கணபதியே) நீர்தான் **தத்வமஸி** என்னும் மஹா வாக்யத்தின் அகண்ட தாத்பர்யத்தின் கண்கண்ட தத்வப் பொருள்.

இங்குள்ள ப்ரத்யக்ஷம் என்ற பதம் உபாஸகனுக்கு அனுமானம், சப்தம் போன்ற ப்ரமாணங்களை சார்ந்திருக்க வேண்டியல்லாது ப்ரத்யக்ஷமாகக் கண்முன்னே விளங்கும் ப்ரஹ்மம் என்று உறுதி செய்கிறது. சப்த அர்த்தங்களுக்கு அபேதம் சாஸ்த்ர ஸித்தம். எனவே மஹாவாக்ய ரூபமான **தத்வமஸி** என்பதற்கும் அதனுடைய அகண்ட தாத்பர்யார்த்த வடிவமான ஜீவப்ரஹ்மைக்கிய அத்வைத வடிவமான தங்களுக்கும் சற்றும் பேதமில்லை. இதுதான் ப்ரத்யக்ஷம்– உண்மை. ஆத்மாபரோக்ஷமே தான் ப்ரத்யக்ஷம். இதுதான் பாதிக்கப்படாத அர்த்தம் (அபாதிகம்) மேலும் ப்ரத்யக்ஷம், அனுமானம் ஆகிய அநாத்ம பாஹ்ய ப்ரமாணங்கள் யாவும் அத்யஸ்த வடிவமானவை.

அபேத தர்சன வடிவமான தத்துவஞான ஸாதன மஹாவாக்ய அகண்ட ஞானமே ப்ரத்யக்ஷ பதத்துக்கு ரஹஸ்யமான பொருளாகும். ஸகுண ஸாகார த்யானத்தினாலும் கணபதிக்கு மஹாவாக்ய ஸ்வரூபம் ஸித்திக்கிறது.

கஜமுகம் – தத்பதம், நரவடிவம் – த்வம்பதம் இவ்விரண்டிடையே பேதமின்மைக்கு **அஸி** என்பதன் பொருள். கணபதி தன் வடிவில் கண்களுக்கு சாக்ஷியாக நரகஜ உபயதேஹாத்மகமான ஸகுண ப்ரஹ்மமாக விளங்குகிறார். வேறொரு வகையில்–

தத்பதம் – **கஜம்** என்னும் **சிவம்,** **த்வம்பதம்** – நான் என்னும் **ஜீவன்.** ஜீவபதமானது சிவபதத்தை நோக்கிச் செல்கிறது. ***கச்சந்தி*** என்றால் செல்கிறார்கள். யார்? யோகிகள். க என்றால் – யோகிகள் சென்று ஒடுங்கும் இடம். ***ஜாயதே*** – ஜகத் உற்பத்தியாகிறது. (அதாவது ஜ எனக் கொள்ளலாம்.) கவும், ஜவும், ஒடுக்கமும், தோற்றமும், ஆகின்றன. ப்ரஹ்மத்தில் ஸ்ருஷ்டி, ப்ரளயம் என்ற இருநிலை ஸ்திதி இதில் உள்ளடங்கியதன்றோ. இவ்விரு நிலைகளுக்கிடையே பேதமின்மை **அஸி** என்ற பதத்தால் விளங்கும். அநிர்வசனீயமான, எப்படி, எங்கிருந்து, எதற்காக என்றெல்லாம் விவரிக்கமுடியாத மாயையான கஜாகார மன்றோ இந்த ஓம்காரம். இதுதான் ஜகத்தின் காரணம். இதைத்தான் ப்ரக்ருதி, ப்ரதானம், கணேசர், மாயாவசிஷ்டசைதன்யம், ப்ரஹ்மம், பரம்பொருள் என்கின்றனர்.

கணேசதாபினியில் கண்ட இச் ச்ருதி வாக்கியங்களின் கருத்து– ப்ரணவம் மற்றும் ஜகத் – (கஜாகாரம் கஜமுக தேவர்) தேஹம் – (கணேசர் உருவம்) – இவ்விரு தத்வங்களின் ஒற்றுமையை விளக்குகிறது. **ஓம்** என்ற வரிவடிவம் யானை முகத்தை நினைவூட்டுவதாக உள்ளது என்பது நாமறிந்ததே. இதனால் கணபதியின் ஆகாரமே ஜீவப்ரஹ்மைக்ய போதகமான மஹாவாக்ய வடிவமாக உள்ளது. இதைத்தான் இந்த உபநிடதம் இரண்டாவது மந்திரமாவது நமக்கு தெரிவிக்கிறது. மேலும் த்வம் – பத லக்ஷ்யார்த்த கூடஸ்தன் எப்போதும் ப்ரத்யக்ஷமே. தத் பதலக்ஷ்யார்த்த ப்ரஹ்மம் எப்போதும் பரோக்ஷமே. எனவே பரோக்ஷமாயுள்ள ப்ரஹ்மம் நித்ய ப்ரத்யக்ஷமாயுள்ள கூடஸ்த (ஸாக்ஷி) வடிவத்தோடு அபேதம் என்று (உணராமல்

உணருங்கால்) அறியுங்கால் ப்ரத்யக்ஷமாகிறது. அதாவது அபரோக்ஷமாகிறது. ப்ரத்யக்ஷ ஸாதனம் – அகண்ட தாத்பர்ய ஸ்வரூபமான மஹாவாக்யமாதலால்தான் –உபநிஷத்து – **த்வமேவ ப்ரத்யக்ஷம் தத்வமஸி** என்று கூறிற்று. ஜீவவாசகமான **த்வம்பதம்** நித்யப்ரத்யக்ஷம். எனவே அபரோக்ஷ ஸாக்ஷாத்கார ஸாதனமான மஹாவாக்ய வடிவ **தத்துவமஸி**யோடு ஏகாரப் பொருளையுடைய ***ஏவ*** என்னும் பதத்தினால் அபேதப்படுத்துகிறது.

இதில் மஹாகணபதியின் ஸ்வரூபம், மந்த்ர ஸ்வரூபம், ஜீவஜகத் – பரங்களின் ஸமஷ்டிவடிவம் இவைகள் நிரூபிக்கப்பட்டன. இனி ஸ்ருஷ்டி– ஸ்திதி– ஸம்ஹார காரியங்களைக் கூறுவதன் நிமித்தம் நிஷ்களவடிவ கணபதிக்கு ஸகலவடிவ **தடஸ்தலக்ஷணம்** கூறுகிறது உபநிஷத்.

த்வமேவ கேவலம். கர்த்தாஸி........

1–4. கேவலம் – வேறொரு உதவியில்லாமல்
த்வம் ஏவ – (நீரே) நீங்களே
கர்த்தாஸி – (பலவாய்த் தோன்றும் ஸகல ப்ரபஞ்சத்துக்கும்) ஸ்ருஷ்டிகர்த்தா.

தனியான காரண ப்ரஹ்மம் அவ்யக்தம் தொடங்கி ஸ்தூல தேஹம் வரையிலான ஜகத்தின் உற்பத்திக்காரணர் ஆகிறீர்.

த்வமேவ கேவலம் த⁴ர்த்தாஸி........

1–5. கேவலம் – வேறொரு உதவியில்லாமல்
த்வம்ஏவ – நீங்களே
தர்த்தாஸி –(ஸகலப்ரபஞ்சத்தையும்)தரித்துக் கொண்டிருக்கிறீர்கள். அதாவது பரிபாலிக்கிறீர்கள்.

பெயர் உருவம் செயல் வேறுபாடு காரணமாக அதனதன் நல்வினை தீவினை அடிப்படையில் அமையும் போக மோக்ஷங்களை அடையச்செய்து ஜகத்தை ரக்ஷிக்கும் ரக்ஷண கர்த்தாவாகிறீர்.

த்வமேவ கேவலம் ஹர்த்தாஸி.........

1–6. கேவலம் – வேறொரு உதவியில்லாமல்
த்வம் ஏவ – நீங்கள் ஒருவரே
ஹர்த்தாஸி –(ஸமஸ்த ப்ரபஞ்சங்களையும் முடிவில்) ஸம்ஹாரம் செய்கின்றீர்.

எல்லா ஜீவாத்மாக்களும் ஓய்வுபெறச் செய்வதற்காக நித்ய, நைமித்திக, ப்ராக்ருத, ஆத்யந்தம் என்கிற நான்குவகை ப்ரளயங்களில் ஒடுங்கச் செய்கின்றீர். இவ்வாறு கணேசரைக் கூறுவதால் அவரே ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாராதி க்ருத்யங்களுக்கு மூல காரணர் என்று அறுதியிடுகிறது உபநிஷத்து. மேலும் இதனால், ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரர் ஆகிய மூவரும் காரணேஶ்வரரான கணபதியின் ஆக்ஞைக்கு கட்டுப்பட்டவராக ஆகிறார்கள் என்றும் ஆகிறது.

தஞ்ஜலானிதி சாந்த உபஸீதஃ – காணும் இந்த ஜகத், எதில் தோன்றி, எதில் லயத்தை அடைகிறதோ மற்றும் எதில் இருப்புடையதாக இருக்கிறதோ அதனை உணர்ந்து சாந்தமாய் உபாஸிக்கவும் – என்று உபநிஷத்தும்,
ஜன்மாத்யஸ்ய யதஃ – என்று ப்ரஹ்ம ஸூத்ரமும் கூறுகின்றன. மூலகாரணம் தான் பரமாத்மா. எனவேதான் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரத்தால், கணேசரே ஜகத்தின் உற்பத்திக் காரணமாகிறார்.

யஃ தார்ணநாபிஃ ஸ்ருஜதே க்ருஜதே ச
ததா(அ)க்ஷராத் ஸம்பவதீஹ விஶ்வம்

எவ்வாறு(எட்டுக்கால் பூச்சி) சிலந்தியானது தனக்கு அன்னியமாக வேறு காரணமில்லாமல் நுண்ணிய நூலை தன்னிலிருந்தே நூற்று வலை பின்னி அதில் தான் வசித்திருந்து, மறுபடியும் அதை விழுங்கி தன்னில் லயப்படுத்திக் கொள்ளுகிறதோ, அதுபோல சாசுவதமான பரம்பொருளுக்கு இதர காரணமின்றி இந்த ஜகத்தானது அதற்கு அபின்ன, விலக்ஷணமாக உண்டாயிருக்கின்றது. என்று ச்ருதி கூறுகிறது.

த்வமேவ ஸர்வம் கல்விதம் ப்ரஹ்மாஸி..........

1–7. இந்த ப்ரபஞ்சமானது ப்ரஹ்மத்தினிடத்தில் அத்யாஸமாய் தோன்றுகிறது. எனவே ப்ரபஞ்சம் மித்யை. ஆனால் இந்த அத்யாஸத்துக்கு அதிஷ்டானம் ப்ரஹ்மமே. எனவே ப்ரபஞ்சத்துக்கு ப்ரஹ்மம் விவர்த்த காரணம் ஆகிறது. (கயிறுபோல). ஆகையினால் கணேசராகும் பரம்பொருள் இந்த ப்ரபஞ்சத்தின் அபின்ன, நிமித்த, உபாதான, விவர்த்த காரணமாகிறார் என்பது ஸித்திக்கிறது. மேற்கண்ட வாக்யங்களால் ப்ரஹ்மத்தில் தோன்றி வாழ்ந்து மறையும் – காணும் ஸ்தூலமும் காணா ஸூக்ஷ்மமுமாய் இந்த சராசரம் –ப்ரபஞ்சம் ப்ரஹ்மம் என்று உணரவேண்டும். சாந்தோக்யமும் – ***ஸர்வம் கல்விதம் ப்ரஹ்மா*** என்று கூறுகிறது.

த்வம். ஸாக்ஷாத் ஆத்மாஸி நித்யம் ....

1–8. நித்யம் என்பது சாசுவதம்– அதாவது மூன்று காலங்களிலும் உள்ளது. அல்லது எக்காலம் என்று வரையறுக்க முடியாதது. எது நித்யமோ– அது ஸுத்த, புத்த, நிர்விசேஷமாக விளங்கும். இதுதான் ஆத்ம சைதன்யம். இதுவேதான் ஆத்மா என்கிறது. இது ப்ரஹ்மமே. எனவே ஆத்மாவாகிற நித்யப் பொருள் ப்ரத்யக்ஷமாக கண்முன்னே நீரே இருக்கிறீர் என்று உபநிஷத் கூறுகிறது. ஏனெனில் நேரில் பார்த்த விஷயத்தில் பொருந்தாது என்ற விஷயமே இல்லை. ***ந ஹி த்ருஷ்டே அனுப பன்னம் நாம....*** சரீராதிகளைவிட, ப்ரபஞ்சத்தைவிட வேறுபட்டதான, நித்ய ஸத்ய வஸ்துவான, அவாங்மன கோசரமான, இந்த ஆத்மவஸ்து கணேச ப்ரஹ்மமாக, கண்கண்ட வஸ்துவாக கண்முன்னே நின்று காட்சியளிக்கிறது. இதன்பின் வேறு விளக்கங்களும் தேவை தானோ? ***யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ*** என்றுதானே சுருதியும் சொல்கிறது.

இதுவரை நிரதிசயமான, ப்ரணவப் பொருளாக நிறைந்ததும், முத்தொழிலுக்கும் முழுமுதற்பொருளாக இருப்பதும், ஸகல நிலையிலும் நிறைந்த ***ஆத்ம ஸ்வரூபமாக*** நிறைந்ததுமான ப்ரஹ்மம் ***கணேசரே*** எனக் கண்டோம்.

இவண் முதற்கண்டம் முடிவுறுகிறது.

இரண்டாம் கண்டம்

ருதம் வச்மி ஸத்யம் வச்மி

2–1. ருதத்தையும் ஸத்யத்தையும் பேசுகின்ற நான் உனது பக்தனல்லவா. எனவே இதனைக் கருதி என்னை காக்கவேண்டும். என்ற ப்ரார்த்தனை. இங்கு காணப்படும் ***ருதம், ஸத்யம்***, என்ற பதங்கள் ***வச்மி*** என்ற வினைமுற்றுடன் சம்பந்தப்படுவதாகும். ப்ரஹ்மத்தைக் குறிப்பவையல்ல. மனஸ், வாக்கு ஸம்பந்த முடையவை. எனவே ருதம் என்பது உண்மை பற்றிய மனோவ்யாபாரம். அதாவது பேசுவதற்கு முன்னைய நிலை – உள்ளதை உள்ளவாறு காணும் நிலை – உள்ளதை உள்ளவாறு சொல்லத் துணிந்த நிலை எனலாம். ஸத்யம் என்பது வாக்வ்யாபாரம். அதாவது, உண்மையை – உள்ளதை உள்ளவாறு வாய்விட்டுப் பிறர் கேட்கச் சொல்வதாம்.

(மேலும் இதில் ஒரு குறிப்பு – தமிழில் இந்த ரு என்ற எழுத்து கிடையாது. ஆனால் இதனை தமிழில் எழுதும் போது ரி என்றோ ரு என்றோதான் எழுதுவது வழக்கமாக உள்ளது. ஆனால் இந்த இரண்டு தமிழ் எழுத்துக்களின் இடையிலான உச்சரிப்பில்தான் இது கூறப்படவேண்டியுள்ளது.)

இவண் இரண்டாவது கண்டம் நிறைவெய்துகிறது.



மூன்றாவது கண்டம் தொடங்குகிறது.

அவ த்வம்மாம்	*அவ வக்தாரம்*
அவ ஶ்ரோதாரம்	*அவ தாதாரம்*
அவ தாதாரம்	*அவானூசானம்*
அவ ஶிஷ்யம்	*அவ பஶ்சாதாத்*
அவ புரஸ்தாத்	*அவோத்தராதாத்*
அவ தக்ஷிணாதாத்	*அவ ஶோர்த்வாதாத்*
அவாதராதாத்	*ஸர்வதோமாம்*
பாஹி பாஹி	*ஸமந்தாத்*

3-1. உபநிஷதத்தை பாடம் கேட்பவன் ச்ரவணம் செய்பவன் ஸாதாரணமானவன் அல்ல. முமுக்ஷு எனப்படுபவன். மோக்ஷ இச்சையில் சாதன சதுஷ்டயங்களை அவலம்பித்து ஸாதனையில் இருப்பவன். எனவேதான் இது உத்தம அதிகாரியின் விஷயம். இப்படிப்பட்ட முமுக்ஷுவான நான் எக்காலத்திலும் பேச்சிலும் உண்மையைக் கடைப்பிடிப்பவன். இ த் த கை ய எனக்குமலையென இடர் ஏற்பட்டாலும் அதனின்று காத்து அருள்வாயாக என்று ப்ரார்த்தனை. நான் வக்தா. உனது நாமரூப குணங்களை – அவற்றின் சிறப்புக்களை உணர்ந்து சொல்லிவருபவன். மேலும் பிறர் சொல்ல அவற்றைச் சிரத்தையோடு கேட்டு வருபவன். உன் ப்ரீதியொன்றையே கருத்தில் கொண்டு ஏனைய எளியோருக்கும் உணவு, உடை, பொன், பொருள் வழங்கி வருபவன். மேலும் ஹோமாக்னியில் உனக்கிஷ்டமான ★அஷ்டத்ரவ்யம் முதலியவற்றை முறையாக ஹோமம் செய்து வருபவன். உன்னையடைய கர்மம், ஞானம், உபாஸனை, யோகம், தவம் என்ற ஸாதனைகளை கடைப்பிடித்து வருபவன். வேதம் ஓதி வருகின்றவன். சிஷ்யனாகி சரண் புகுந்துள்ளவன். இத்தகைய என்னை மேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்கு, ஆகாயம், பூமி ஆகிய எல்லா இடங்களிலிருந்தும்,

---

★(அஷ்டத்ரவ்யம் என்னென்ன? அதன் தத்வார்த்தங்கள், இந்த உரையாசிரியர் எழுதியுள்ள ஸ்ரீமஹா கணபதி மந்த்ர வழிபாடு என்ற புத்தகத்தில் காணலாம்.)

சுற்றியிருந்தும்கூட வரும் ஆபத்திலிருந்தும் காத்தருளுவாயாக. கணேச ப்ரம்மத்தின் கவனத்தை ஸாதகனிடத்தில் ஈர்க்க வேண்டி பாஹி– பாஹி என இருமுறை கூறப்பட்டது. மேலும் எதிர்பார்ப்பதும், எதிர்பாராததுமான ஆபத்தினின்றும்கூட காத்தருளவேணும் என்பதற்காக எனவும் கொள்ளலாம்.

இவ்வாறு பலவகையாக ஸாதகன் ப்ரார்த்திக்கிறான். முன்பு ப்ரஹ்மம் என்ற ஏகவஸ்துவாகக் கண்டுவிட்டபிறகு அதுவே எவ்விதம் பலவகையாகவும் விளங்குகிறது என்பதை அடுத்த கண்டத்தில் காணலாம்.

இவண் 3வது கண்டம் நிறைவெய்துகிறது.

4ம் கண்டம்

அத்யாத்ம ஸ்வரூப வர்ணனம்

த்வம் வாங்மய:ஃ த்வம் சின்மய:ஃ
த்வம் ஆனந்தமய:ஃ த்வம் ப்ரஹ்மமய:ஃ
த்வம் ஸச்சிதாநந்தா த்விதீயோ (அ)ஸி
த்வம் ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி
த்வம் ஞானமயோ விக்ஞானமயோ (அ)ஸி

4–1. நீரே – வாக்கு மயம் அதாவது சொல்மயம்.
நீரே – அறிவு மயம் (ப்ரக்ஞானம்)
நீரே – ஆனந்த மயம் (ப்ரியம்)
நீரே – ப்ரஹ்மமயம் (ஹிரண்யகர்ப்பர்– அதாவது காரியப்ரஹ்மா)
நீரே – ஸத், நீரே –சித், நீரே –ஆனந்தம்.

ஸத் என்ற எப்போதும் உள்ளதும், சித் என்ற ஸ்வயம்பிரகாசமும் ஆனந்தம் என்ற ஸ்வஸுக சைதன்யமுமான கணேசர் நீரே. அதாவது எல்லையில்லாத ஆனந்த வடிவம். இவ்வாறு ஸத் – சித்– ஆனந்தம் என்று பிரிக்க முடியாமல், ஏகரஸமாக – இரண்டாக அறிய முடியாமல் இருப்பதான அத்விதீய வஸ்து நீர் தான்.

நீரே — கண்ணால் காணப்படுகிற ப்ரஹ்மம்.

மஹா வாக்யமாக முன்னால் கண்ட கணேசர் இங்கு அதன் ஸகல வடிவமாக காக்ஷியளிக்கிறார்.

நீரே — அறிவு மயமானவர்.

நீரே — அறிவின் விஷய திறமையான விக்ஞான மயம்.

மயம் என்பது ஒன்றின் அடர்வுமிகுதியைக் குறிக்கும்.[consisting or composed of (i.e.) full of] அதாவது ம்ருண்மயம் — ரஜதமயம்(வெள்ளி) கனகமயம் — (தங்கம்) ஆகியவைகளில் முறையே மண்ணாலும், வெள்ளியாலும், தங்கத்தாலும் ஆனவை என்ற பொருளில் மூலப் பொருளிலிருந்து தோன்றியது குறிக்கப்படுகிறது. இங்கு நித்யமான ஒன்று ப்ரஹ்மம். அதாவது கணபதி. இவர் வாக்காகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும், காரண ப்ரஹ்மமாகவும் பேசப்படுகிறார். ஆனால் ப்ரஹ்மத்திடம் மிகுதி—குறைவு என்று பகுத்தறிய முடியாது. அது மற்றொன்றிலிருந்து தோன்றவுமில்லை. எனவே அது அதுவேதான் என்பது போல ஸ்வார்த்தேமயம் எனக் கொண்டு விளங்கிக் கொள்ளவேணும். வாக்கு — வாக்கே. சொல் — சொல்லே. சித் — சித்தே. இதுபோல் ஒவ்வொன்றும் கணேசர் மயமாக இருக்கிறது.

ஆப்ரஹ்ம ஸ்தம்ப பர்யந்தம் பரமாத்ம ஸ்வரூபகம்
ஸ்தாவரம் ஜங்கமம் சைவ ப்ரணமாமி ஜகன்மயம்

பிரஹ்மா முதல் அணு வரையில் ஸ்தாவர ஜங்கம ஸ்வரூபங்களாக இருக்குமிந்த அசையும் அசையா ப்ரபஞ்சமெல்லாம் பரப்ரஹ்ம வடிவமாக இருக்கின்றன. அப்படியுள்ள பரப்ரஹ்மமே குரு ஸ்வரூபமாக இருக்கிறது, என்ற குருகீதா வாக்யமே மயம் என்பதன் பொருளை நன்றாக விளக்குகிறது.

4—2. வாக் என்பது ஒலி. மனிதன் முதலான அனைத்து ஜீவன்களிலும் தொண்டை, வாய் முதலிய இடங்கலிருந்து தோன்றும் வைகரீயும், வாத்யங்கள், மேகங்கள் முதலிய இடங்களிலிருந்து வெளிப்படுவ்தும், ஸகலவித ஒலிகளும் எழுத்து வடிவமாயுள்ளதுமான ஏனைய ஒலிகளும் வாக் மயம்.

இதையே ப்ரஹதாரண்யம் ***யஃ கச்ச சப்தஃ .....ப்ராணமயஃ*** என்கிறது. இதனால் கணேசர் சப்தமயமாகவே உபாஸிக்கப் படுகிறார். **சின்மயம்** என்பது இங்கு சித் என்கிற அறிவைக் குறிக்கும். ***சிதீஸம்க்ஞானே*** என்ற தாது பாடப்படி ஸம்க்ஞானம் என்னும் சொல் சாஸ்த்ரம், யுக்தி, அறிவு எனப்பொருள்படும். மேலும் ஆத்மானாத்ம விவேகம் ஏற்பட வல்ல ஞானம் என்றும் கூறலாம். இத்தகைய ஞான ஸ்வரூபமானதுதான் **சின்மயம்.** உபநிஷத் வாக்யமான **ப்ரக்ஞானம் ப்ரஹ்மா ப்ரக்ஞானமானந்தம் ப்ரஹ்மா** என்றதில் ப்ரக்ஞானம் என்ற பதமும் –**ஸம்க்ஞானம்** என்பதும்ஒரே பொருள்தான். எனவேதான், அறிவுமயமாக விளங்குகிறார். இவ்வாறு உபாஸிக்கிறோம். ஆனந்தமே ஆனந்தமயம் தான். கற்கண்டுக் கட்டியில் எப்படி எல்லாப் பகுதியும் ருசிமயமாக இருக்கிறதோ, அதுபோல கணேசரும் தெவிட்டாத பேரின்ப ஆனந்த ஊற்றாக ப்ரகாசிக்கிறார். இந்த ஆனந்தநிலையைத் தான் **எல்லையில்லாஆனந்தமளித்து** என ஒளவையார் தன் அகவலில் கூறுகிறாள். ப்ரஹ்மாவே **ப்ரஹ்மமயர்.** இவர் **ஹிரண்யகர்ப்பர்** என்கிற கார்ய ப்ரஹ்மமாக இருப்பதால் இவரை கணேச வடிவமாக உபாஸிக்கிறோம் இவ்விதமே வழி பலவாயிருந்தாலும் (இட்டு செல்கின்ற) சேருகின்ற இடம் ஒன்றுதான் என்கிற அடிப்படையின் ருசிவைசித்ரியத்தால் உபாஸனா மார்க்கமும் உபாஸ்ய பேதமும் காணப்படுவது ஸஹஜமே.

4–3. அடுத்து இதற்கப்பால் நிரூபாதிக ஸுத்தப்ரஹ்மமான கணேசரை உபாஸிக்க வேண்டுவது விளக்கப்படுகிறது.

ஸத் = பெயர், இடம், காலம், பொருள், காரணம் என்ற ஐந்தும் அழிந்தாலும் தான் அழியாமல் எப்போதும் நிலைத்திருப்பது (காலதேச வஸ்து பரிச்சேதங்களற்றது) எப்போதும் நிலைத்து இருக்கிறதோ (அஸ்தி) அது இதன் வடிவம். சித் = ஸ்வயம்பிரகாசமாக, ஸத்தின் ப்ரகாசமாக இருப்பது. ஆனந்தம் = ஸுக சைதன்ய ஸ்வரூபமாக, எல்லையிலா ஆனந்த ஸமுத்ரமாக, வியக்கத்தக்க ஈடு இணைகாண முடியாத பேருவகையாக எங்கும், எதற்கும் ப்ரியமாக இருப்பது. இவ்வாறு ஸத்– சித்– ஆனந்தமாக உள்ள கணேசரே நிர்குண, நிருபாதிக, ஸுத்தப்ரஹ்மமாக உபாஸிக்கப்படுகிறார்.

4–4. மேலும் ஸ்ரீவித்யா தேவியான லலிதையின் தத்வங்களை விளக்க வந்த பஹ்வ்ருசோபநிஷத்து, அவளையே ஸச்சிதானந்தலஹரியாக வர்ணிக்கிறது. எவ்வாறெனில்– உள்ளும், புறமும், வெளியும் தொடர்ந்து புகுந்து விளங்குகின்ற அவள் ஒருவளே தொடர்ந்து இருக்கிறாள். ***யதஸ்தி ஸந்மாத்ரம்.*** இருக்கின்ற அவளே தொடர்ந்து சித்தாக பிராகாசிக்கிறாள். ***யத்விபாதி சிந்மாத்ரம்.*** பிரகாசிக்கின்ற அவளே எங்கும் எதற்கும் ப்ரியமாக இருக்கிறாள். ***யத்ப்ரியமானந்தம்.***

இப்படியுள்ள லலிதையான பராசக்தியையே – மேற்படி உபநிஷத்து ***ஸத்யம் ஏகம் லலிதாக்யம்*** என்று கூறுகிறது. இதனை இங்கு ஒப்புநோக்குவதன் காரணம் என்னவென்றால் பராசக்தியான லலிதையை பரம்பொருளாகக் கூறும் உபநிஷத்துகளுக்கும் கணேசரை பரம்பொருளாகக் கூறும் உபநிஷத்துக்கும் லக்ஷ்யம் ஒன்றல்லவா. மேலும் 28 அக்ஷரங்களையுடைய மஹா மந்த்ர, மஹா வாக்ய ஸ்வரூபமான –பரம்பொருள் தத்வமான– கணேசரை வழிபட்டு பின்பு 28 அக்ஷரங்களையுடைய மஹா ஷோடசீ ஸ்வரூபமான லலிதையின் ப்ரஹ்ம வித்யா வழிபாட்டில் தன்மயமடைவது என்பது உபாஸனா காண்டம் விளக்கும் முறையல்லவா? எனவேதான் கணேசன் ஸச்சிதானந்த ஸ்வரூபர். மேலும் தன் இனத்திலோ அல்லது இனமல்லாததிலோ இரண்டு என்றில்லாத அத்விதீயம் இந்த கணேசப்ரஹ்மம். அறிபவன், அறியப்படுவது என இங்கே பிரிக்க முடியாது. முதலில் ஸத்தாக உணரத்தொடங்கி உட்புலன்கள் வழியாக காண்பவர்களின் உணர்வில் நிர்குணம், நிஷ்களம் நிரவத்யம், நிரஞ்ஜனம், நித்யம், ஸுத்தம், புத்தம், ஸ்வபாவம் எனக் கூறப்படுகின்ற ப்ரஹ்மமாக கணேசர் நிறைகிறார்.

4–5. ஞானமயம் – அதாவது இவன் மனிதன். இவன் அந்தணன். இவன் அறிஞன், இது வஸ்த்ரம், இது புத்தகம், இது வெண்மை, இதுநீலம், என்றெல்லாம் பத பதார்த்த ஸம்பந்தத்தில் இணைந்து, விவரம் நிறைந்ததும், விவரம் ஏதுமில்லாததுமாக அறிய உதவுவதுதான் ஞானம் எனப்படும். இந்த ஞான ஸ்வரூபியே கணேசராம். இதையே ச்ருதியும் – ***ஞான கனச்சின்மாத்ர ஸ்வரூப: புருஷ ஆத்மா*** என கூறுகின்றது.

4–6. ***விக்ஞானமயம்*** – இந்திரியங்கள் அதனதன் விஷயங்களில் சிறப்பியல்புகளை செவ்வனே புலப்படுத்தும் தன்மையே **விக்ஞானம்.** இந்நிலையில் கணேசர் விக்ஞான மயமாகிறார். இவரேதான் பிறப்பில்லா பெருநிலையை அடைவிக்கும் ப்ரஹ்ம வித்யா ஞானமாக, அந்த வித்தையை உணர்த்தும் புத்தியாக, இரு நிலைகளிலும் விளங்குகிறார். இதையே ***ப்ருஹதாரண்யக*** ச்ருதியும் ***ஸவா அயமாத்மாப்ரஹ்ம விக்ஞான மய:*** என்கிறது.

இவ்வாறாக கணேசரை பலவிதமாக ப்ரஹ்ம வடிவினராகக் கண்டு விளக்கியபின் உபநிஷத்து அவரை ஜகத் காரணராக விளக்கப்போகின்றது.

4ம் கண்டம் நிறைவெய்துகிறது.

5– ம் கண்டம்

அதி தைவிக வர்ணனம்

ஸர்வம் ஜகதிதம் த்வத்தோ ஜாயதே
ஸர்வம் ஜகதிதம் த்வத்தஸ் திஷ்டதி
ஸர்வம் ஜகதிதம் த்வயி லயமேஷ்யதி
ஸர்வம் ஜகதிதம் த்வயி ப்ரத்யேதி
த்வம் பூமி: ஆப: அநல: அநில: நப:
த்வம் சத்வாரி வாக் பதானி

5–1. இதில் கணேச ஸ்வரூப லக்ஷணமும், ஜகத்தின் நிமித்த காரணமாக அமையும் விதமும் கூறப்படுகிறது.

நம்மால் காணப்படும் இந்த சராசர ப்ரபஞ்சமெல்லாம் கணேசரிடமிருந்து தோன்றியவையே, அதாவது அதிஷ்டானத்தினின்று தோன்றியவை என்பதாம். இந்த உலகம்யாவும் உன் ஸ்வரூபத்திலே நிலைபெற்றிருக்கிறது.

இந்த ப்ரபஞ்சமெல்லாம் ப்ரளயகாலத்தில் உன் வடிவிலேயே லயமாகின்றன. மீண்டும் உன் வடிவிலேயே இது அதுவே என உணரப்படுகிறது. எல்லாவற்றிற்கும் கணேசரே காரணமாகிறார் என தெளிவாக்குகிறது. *யதோ வா இமானி பூதானி* என்கிறது தைத்ரியம்.

5–2. ஜகத்துக்கு ஆதாரபூதமான *ப்ருத்வீ,* இது வளர்ச்சியுற உதவும் *ஜலம்,* சூடு, ஒளி, தேஜஸ் எனப்படும் *அக்னி,* எங்கும் வ்யாபித்து பிராணனென உயிர்வாழ உதவும் *வாயு,* எல்லாம் நிலைபெற இடமளிக்கும் *ஆகாயம்* என்றுள்ள இந்த பஞ்ச பூதங்களும் கணேசரே. மேலும் இன்னும் ஸூக்ஷ்மமாகக் கூறவேண்டுமானால், பஞ்சபூத பஞ்சீகரணத்தினால் கலப்புற்றும் கலப்புறாது தனித்துமுள்ள ஸ்தூல ஸூக்ஷ்ம நிலையிலான பஞ்சபூத தத்வங்களும் கணேசரது வடிவமேதான் எனக் கொள்ளலாம். இதற்குப் பல ச்ருதிப்ரமாணங்கள் கூறலாம். விரிக்கின் பெருகும்.

5–3. நான்கு வகை வாக்குகள். பரா, பச்யந்தி, மத்யமா, வைகரீ என நான்கு வாக்கு ஸ்தானங்களாக கணேசர் விளங்குகிறார். பராதி நான்கும் பதஸ்தானங்கள். அதிஸூக்ஷ்மமானவை. இவற்றை மதிநுட்பம் உள்ள ப்ரஹ்ம நிஷ்டர்களே அறிவர். மூலாதாரம், அநாஹதம், விசுத்தி ஆகிய ஸ்தானங்களை முறையே தாண்டிவரும் நாதம் வைகரீ என்ற பெயரோடு வெளிவருகிறது. இந்த உள்ளும், புறமும் உள்ள வாக்ஸ்தான வடிவனராக கணேசர் இருக்கிறார் என்கிறது உபநிஷத்து, இதனை இன்னும் சற்று ஸாரத்தோடு பார்ப்போம். கணேச ஸ்வரூபத்திலேயே தோன்றி, இருந்து, லயரூப நிவர்த்தியையும், நாசரூப நிவர்த்தினையும் இந்த ப்ரபஞ்சம் எவ்வாறு அடைகிறது என்பதற்கு உதாரணம் பார்ப்போம். நித்ரா தோஷத்தோடு கூடிய தைஜஸன் என்பவனால் கற்பிக்கப்படும் ஸ்வப்ன உலகம் – அந்த ஸ்வப்னாபிமானியாகும் – தைஜஸனது ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்திலேயே அதாவது ஸாக்ஷி ஸ்வரூபத்திலேயே தோன்றி, நிலைத்து, லயத்தையும், நாசத்தையும் அடைவது போலாம். ப்ரபஞ்சம் அர்த்தம் என்றும் சப்தம் என்றும் இருவகை. இதில் அர்த்த ப்ரபஞ்சம் முழுமையும் ப்ருத்வி தொடங்கி பாஞ்ச பௌதிகமானது. சப்த ப்ரபஞ்சம் நான்கு வகை. அவைதான் மேற்படி பராதி வாக்குகள் இப்படிபட்ட இந்த ப்ரபஞ்சமே கணேச வடிவத்தினின்றும் கயிற்றில் தோன்றிய

பாம்பைப் போல அத்யஸ்தமாகத் தோன்றினதாகும். கற்பிக்கப்பட்ட வஸ்துக்களுக்கு அவற்றினுடைய அதிஷ்டான இருப்பைத் (ஸத்தை) தவிர வேறு இருப்பில்லை. மேலும் கற்பிக்கப்பட்ட மித்யா வஸ்துக்களுடைய நாசம் அதிஷ்டான வடிவமாக மிஞ்சுவதாகும். இதுதான் சாஸ்த்ர ஸித்தமாயிற்றே.

இவ்வாறு அத்யாத்ம வடிவினராக விளக்கப்பட்ட கணேசர் அதிஷ்டான நிலையில் அமைந்திருப்பதைக் கண்டபின் அவருடைய துரீய ஸ்வரூபத்தை உபநிஷத் இனி விளக்கப்போகிறது.

5—ம் கண்டம் நிறைவெய்துகிறது.

6—ம் கண்டம்.

த்வம் குணத்ரயாதீத:
(த்வம் அவஸ்த்தாத்ரயா தீத: — சில பாடங்களில் காணப்படுகிறது.)
த்வம் தேஹத்ரயா தீத:
த்வம் காலத்ரயா தீத:
த்வம் மூலாதாரஸ்திதோ(அ)ஸிநித்யம்
த்வம் சக்தி த்ரயாத்மக:
த்வம் யோகினோ த்யாயந்தி நித்யம்
த்வம் ப்ரஹ்மா, த்வம் விஷ்ணு:
த்வம் ருத்ர: த்வம் இந்தர: த்வம் அக்னி:
த்வம் வாயு: த்வம் ஸூர்ய: த்வம் சந்த்ரமா:
த்வம் ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம் (6)

6—1. உரை — ***ஸத்வம், ரஜஸ், தமஸ்*** என்ற முக்குணங்களைக் கடந்தவர். (***ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி*** என்ற மூன்று அவஸ்தைகளைக் கடந்தவர்.) ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரணம் என்ற மூன்றுவித தேஹங்களைக் கடந்தவர். சென்ற, நிகழ், வருங்காலம் என்ற மூன்று காலங்களுக்கு அப்பாற்பட்டவர். சரீரத்திலுள்ள

மூலாதார கமலத்தில் நிரந்தரமாக உறைந்தவர். இச்சை, க்ரியை, ஞானம் என்றும் ப்ராஹ்மீ, வைஷ்ணவீ, ருத்ராணி என்றுள்ள மூன்று சக்தி வடிவமாக இருக்கிறார். ஸ த ா ஸர்வகாலமும் யோகிகளின் த்யான விஷயமாக இருக்கின்றார். இந்த கணேச ப்ரஹ்மமே – ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், இந்த்ரன், அக்னி, வாயு, ஸூர்யன், சந்த்ரன். ப்ரபஞ்சவடிவமான ப்ரஹ்மா, மற்றும் பூலோகம், ஸுவர்க்கம், புவர்லோகம் என உள்ள வ்யாஹ்ருதி வடிவமாக இருக்கின்றார். மேலும் அவர் அனைத்து ப்ரணவ வடிவமான ***ஓம்.***

-------இனி விளக்கமாக காணுவோம்.-------

ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களில் குறைவு, நிறைவு, ஸமவிஷம நிலையே ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களுக்கான காரணமாகும். குணங்கள் கடந்த கணேச ப்ரஹ்மம் இவற்றால் பாதிக்கப்படுவதில்லை. (அவஸ்தைகளுக்கு அப்பாற்பட்டவர் என்னும் போது மூன்றையும் கடந்த நிலையில் துரீயம் எனப்படுகிறார்.) மேலும் தேஹங்களுக்கு அப்பாற்பட்டவர். அதாவது சரீரம் அடையும் ஆறு நிலைகளான ***தோற்றம், நிலைபெறுதல், மாற்றம், வளர்ச்சி, தளர்ச்சி, அழிவு*** – என்பவை கணேசரிடம் இல்லை. மேலும் ஸ்தூல தேஹ அபிமானி – ***விச்வன்,*** ஸூக்ஷ்மதேஹ அபிமானி ***தைஜஸன்,*** ஸுஷுப்திதேஹ அபிமானி ***ப்ராக்ஞன்*** என்கிற முத்தேஹ அபிமானியும் துரீயமாக இருக்கிற கணேசப்ரஹ்மமே.

காலங்களைக் கடந்தவர் என்னும்போது ஸ்ருஷ்ட்யாதி நடைபெறும் காலங்களைக் கடந்தவர் எனலாம். அதாவது கால விசேஷங்கள் அவரை அண்டாத நிலையில் நித்யர். காலம் – இதற்கு ஒரு பரிணாமமே இல்லை. எவ்வாறு பகல், இரவு இரண்டுக்கும் இடையில் மாறுதலுக்குக் காரணமானதொரு நிலையில்லையோ அதுபோல சென்ற, நிகழ், வருங்காலம் என்பது அகண்டமான நிலையாக உள்ளது. எனவேதான் **ப்ரஹ்மமும் அகண்ட வஸ்து** என்று சைவ ஸித்தாந்தம் செய்ய வந்த ஸ்ரீஅபிநவகுப்தர் கூறுகிறார்.

துரீய நிலை என்பது காரண காரிய ப்ரஹ்ம தர்மங்களிலில்லாது, ஜாக்ரதாதி அவஸ்தா த்ரயங்களுக்கு ஸாக்ஷியாக உள்ளதற்கும் வேறுபட்ட நிலை என்கிறது ஸர்வோபநிஷத்.

அவஸ்தாத்ரய பாவாத்பாவ ஸாக்ஷி ஸ்வயம் பாவா பாவரஹிதம் நைரந்தர்யம் சைக்யம் யதா ததா தத் துரீயம் சைதன்ய மித்யுச்யதே —
ஸர்வோபநிஷத்

6–2. நான்கிதழ் கொண்ட மூலாதார கமலத்தில் தான் கணேசரின் ஸ்தானம். இந்த மூலாதாரம் எருவாய்க்கும் கருவாய்க்கும் இடைப்பட்டதாகும். இவ்விடத்தில் தான் மாத்ருகா அக்ஷரங்களான *வ, ஶ, ஷ, ஸ* என்பவைகளின் வ்யாப்தி. முன்பு கண்டபடி *பரா* என்ற வாக்குஸ்தானமும் இந்த மூலாதாரமே. எனவே தான் நாத வடிவில் *பரை* என்ற பெயரில் கர்ப்பமாக இருக்கும் மூலாதாரச் சக்தியான கணபதி தத்வம் ஜீவத் துவத்தையும் ஜீவ ஸமூகமான ஸமஷ்டி ப்ரபஞ்சத்தையும் நடத்துகிறது என்பது ஸத்குருநாதர்களின் அனுபவ ஸித்தாந்தமான சாஸ்த்ர, யோக நூல்களின் ஸாரமாம். மேலும் மூலாதாரத்திலிருந்து முழு மூச்சாகக் கிளம்பும்(பரா வாக்கு) குண்டலினிச் சக்தி உச்சிக்கமலத்தில் அதாவது ஸஹஸ்ராரத்தில் சென்று அங்கு யானையின் பிளிறல் போன்ற த்வனி ஏற்படுவதாக யோகிகளின் கூற்று. இதற்கு ஸ்ரீஸூக்தத்தில்(3–வது ரிக்கில்) *அச்வபூர்வாம் ரதமத்யாம் ஹஸ்திநாத ப்ரபோதினீம்.................* என்ற ருக்கின் வ்யாக்யானமே ப்ரமாணமாக உள்ளது அங்கு கண்டு தெளியலாம். மேலும் மூலாதார கணபதி என்ற பெயரில் *ஸநத்ஸுஜாதீயம் பாலார்ச்சன பத்ததி*யில் *அஜபா நிவேதன ப்ரகரணத்தில்* கீழ்வருமாறு கூறுவது இங்கு ஓர் எடுத்துக்காட்டு.

குதலிங்காந்தரே சக்ர மாதரம்து சதுர்தளம்
பரமஃ ஸஹஜஸ்தத்வதானந்தோ வீர பூர்வகஃ
யோகானந்தஶ்சதஸ்யஃ ஆதீஶானாதிதலே பலம்
ஆதாரஸ்துசதுர்தலோ(அ)ருணருசிர்வா ஸாந்தவர்ணாபிதஃ
ஆதாரே ரதியுதம் தேவம் கணபதிம் ஸ்மரேத்
ரக்தவர்ணம் கணேசம் ச மூலாதாரே சதுர்தலே
வாதிவேத ஸமாயுக்தே ஷட்ஶதம் ச ஸமர்ப்பயேத்.

6–3. இனி சக்தி விஷயம்– காரியம் நிறைவுறக் காரணமாக வுள்ள ஒன்றினுடைய தர்மம் தனித்தன்மை அல்லது சிறப்பியல்பு தான் சக்தி எனப்படுகிறது. இதுவே முப்பிரிவு. ஒரு செயல் நினைக்கப்படுகிறது. இது இச்சை, இதுவே ச்ருஷ்டி. அச்செயல் காரிய வடிவமாக ஆகிறது, இது கிரியை, இதுவே ஸ்திதி. அக்காரிய வடிவமாயுள்ளது மூலத்தில் லயமாகிறது. இது ஞானம், இதுவே லயமான ஸம்ஹாரம், எனவே ஸத்வாதி குண ரூபமான பிருஹ்ம, விஷ்ணு, ருத்ரர்களிடமுள்ள மேற்படி இச்சை, க்ரியா, ஞானாத்மகமான ப்ராஹ்மி, வைஷ்ணவி, ருத்ராணி என்ற முச்சக்தி ஸ்வரூபமாக விளங்குபரே கணேசப்ரஹ்மம். இவரே ஸ்வயம்பிரகாசர் – அந்தர்யாமி. எனவேதான் கடோபநிஷதம் ***தஸ்யபாஸா ஸர்வமிதம் விபாதி*** என்றது.

6–4. யோகிகள் என்பர்ருக்கு மனமும் பஞ்சேந்திரியங்களும் வெளிநோக்கமின்றி ப்ராணனில் ஒன்றியிருக்கும். இந்நிலைதான் எண்ணங்கள் எழாத அசைவற்ற யோகநிலையாம். இதுவே ஆத்மானந்தம். இவ்வாறான நிலையில் அவர்களது சரீரம் ப்ராரப்த பலனை அனுபவிக்கவே வாழ்கிறது. இவர்களின் தியான விஷயமாக எப்போதும் இருக்கப்பட்டவர் இந்த கணேசப்ரஹ்மம். அதாவது ஸவிகல்ப ஸமாதி, நிர்விகல்ப ஸமாதி என்ற இரு நிலைகளிலும் ஐக்யபாவம் பெற்று திகழ்பவர் கணேசர் என்றாகிறது.

6–5. ஒவ்வொரு தேவர்களின் வடிவமும் கணேச ப்ரஹ்மமே என்கிறது உபநிடதம். ஹிரண்யகர்ப்பர் என்கிற ரஜோகுண காரிய ப்ரஹ்மாவாகவும், ஸத்வகுணத்தால் ஸ்திதி கர்த்தாவான விஷ்ணுவாகவும், தமோகுணத்தால் ஸம்ஹார கர்த்தாவான ருத்ரனாகவும், மூவுலகையும் வென்று மேலுலக ஐச்வர்ய போகங்களை அனுபவித்து மகிழும் தேவராஜனான இந்த்ரனாகவும்,மேற்சொன்ன மூர்த்திகளுக்கு மனிதர்களால் கொடுக்கப்படும் ஹவிஸைக்கொண்டு செல்லும் முக்திப்ரதரான அக்னியாகவும், ஜீவர்களின் வாழ்வான ப்ராணா(அ)பான ரூபியாக சராசரங்களுடன் நெருக்கமான தொடர்புடையவரான வாயுவாகவும், ஜீவர்களை நல்வினை தீவினைகளில் ஈடுபடச்செய்து அவற்றின் சாக்ஷியாக விளங்கும் தேஜஸ் கடவுளான ஸூர்யனாகவும், செடிகொடி மரங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமிர்தம்

பொழியும் (தண்ணொளி) சந்த்ரனாகவும், ஜீவர்களுக்கு செய்யக்கூடிய, செய்யக்கூடாதவைகளை உணர்த்தும் வேதரூபியான ப்ரஹ்மா எனவும், இந்த கணேச ப்ரஹ்மமே விளங்குகிறார் என்று கூறுகிறது உபநிஷத்து.

6–6. கணபதிக்கு எட்டுகோடி அவதாரங்கள் உண்டென்றும் அதில் நவக்ரஹங்களையும் தன் வடிவிலேயே அமைந்துக் கொண்டுள்ளார் என்றும் கூறுவார்கள். எவ்வாறெனில் –

கணபதியின்	நெற்றியில்	–	ஸூர்யன்
	நாபியில்	–	சந்த்ரன்
	வலதுதொடையில்	–	செவ்வாய்
	வலது கீழ்க்கையில்	–	புதன்
	சிரஸில்	–	குரு
	இடது கீழ்க்கையில்	–	சுக்ரன்
	வலது மேல்கையில்	–	சனி
	இடது மேல்கையில்	–	ராகு
	இடது தொடையில்	–	கேது என்றவாறு.

6–7. இவ்வாறான கணேசர் மூன்று லோகங்களிலும் அதாவது பூலோகம், அந்தரிக்ஷம், ஸ்வர்கம் என்றபடி வியாபித்து நிற்பவர். இதுவே வ்யாஹ்ருதியால் குறிப்பிடப்பட்டது. முதலில் ஓம் என்ற ப்ரணவ வாசகத்துடன் தொடங்கப்பட்ட உபநிஷத்து கணேசப் பிரஹ்மத்தினுடைய ஸ்வரூபத்தை பல விதங்களில் விளக்கிக் கூறி, கார்ய தர்மங்களும், காரண தர்மங்களும் காணப்பெறாததால் நிர்குண. நிராகார, நிஷ்ப்ரபஞ்ச விசுத்த துரீய பிரஹ்மமே அவர்தான் என்பதை உறுதிபடத் தெரிவித்து– இந்த 6ம் கண்டத்தின் இறுதியில் மறுமுறையும் ஓம் என்று சொல்லி நிறுத்துகிறது. உபநிஷத்து முடிவுறாத நிலையில் இங்கு ப்ரணவ வாசகம் வந்ததின் காரணம் கண்டோமானால் அடுத்து வரப்போகிற கண்டத்தில் கணேசரின் வித்யை உத்தாரம் செய்ய புகுவதால் இதில் மங்கள வாசகத்துடன் முறையாக முடிவதாகக் கொள்ளலாம். இனி ஜீவர்களுக்கு மாயா ப்ரதிபந்தகம் நீங்க வேண்டி ஸாதனையான கணேச வித்யை ப்ரதிபாதிக்கப்பட இருக்கிறது. காணுவோம்.

6ம் கண்டம் நிறைவெய்துகிறது.

7ம் கண்டம் வித்யை(மந்த்ர) உத்தார கண்டம்.

க^{3}ணாதிம் பூர்வமுச்சார்ய, வர்ணாதிம் ததனந்தரம்
அனுஸ்வாரப் பரதரஃ அர்த்தேந்து லஸிதம்
தாரேண ருத்தம் ஏதத்தவ மனுஸ்வரூபம்
க^{3}காரஃ பூர்வரூபம் அ காரோ மத்யம ரூபம்
அனுஸ்வாரச் சாந்த்ய ரூபம் பிந்து ருத்தர ரூபம்
நாதஃ ஸந்தானம் ஸம்ஹிதா ஸந்திஃ
ஸைஷா கணேச வித்யா
க^{3} ணக ரிஷிஃநிச்ருத் காயத்ரீ சந்தஃ
க^{3}ணபதிர் தேவதா
ஓம் க^{3}ம் ஓம் (கணபதியே நமஃ) —7

7—1. இதில் கணபதி வித்தையின் மந்த்ர உத்தார அமைப்பு விளக்கப்பட்டுள்ளது. முதலில் **கண** என்னும் பதத்தில் முதலாவதான க காரத்தை உச்சரித்து அதன்பின் வர்ணங்களின் முதலாகிய **அ** காரத்தைச் சேர்த்து இதனோடு அனுஸ்வாரத்தையும் அர்த்த பிந்துவையும் சேர்க்க கணபதி மந்த்ரம் மேலும் சிறப்புப் பெறுகிறது. பிரணவத்தோடு சேர்ந்து விளங்குகிறது. ப்ருக்ருதி முன்னே புருஷன் பின்னே என்னும் ஸ்ம்ருதி வசனப்படி— ப்ரணவம்— ப்ருக்ருதி, மந்த்ரம் — புருஷனாம். ருத்ரயாமளத்தில் உள்ள ஏகாக்ஷர கணேச கவசத்தில் ***கம் பீஜம் ஶக்திரோங்காரஃ ஸர்வகாமார்த்த ஸித்தயே*** எனக் காணப்படுவதால் ப்ரணவம்— சக்தி, மந்த்ரம் — பீஜம் என்ற நிலையில் இம்மந்த்ரம் ஸஶக்தி கணேசபீஜமந்த்ரமாக விளங்குகிறது. இதில் மந்த்ரஸ்வரூபம் அநதிகாரிகளுக்கு ஸுலபமாகத் தெரியக் கூடாதென்று ஸங்கேதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் ஸங்கேதமுறையில் போதிய பயிற்சி பெறும் வாய்ப்பில்லா உண்மை உபாஸகர்களின் நலன் கருதியே ஸ்ருதி மந்த்ர ஸ்வரூபத்தையும் அடுத்து தெளிவாக வெளிப்படையாக தெரிவிக்கிறது.

க^{3} கார (ஹல்) மெய் அதாவது க்^{3} முதலெழுத்து.
அ என்பது நடுவெழுத்து
முடிவில் அனுஸ்வாரம் ம் தொடர்ந்து பிந்து

இந்த நான்கு உறுப்புகளும் ஒரே ஒலியாக இணையச் செய்யும் ஸந்தானம் என்பது நாதம் அதாவது ஒலி இணையும் சிறப்பு ஸுஸ்வரமான, ஸ்வரஸுகமான லயவிசேஷம். பிறகு க தொடங்கி நாதம் ஈறான அவயவங்களின் ஸந்தி என்னும் எழுத்துக்களின் இணைப்பு என்பது ஸம்ஹிதா(பாணினி ஸூத்ரம் பகர்கிறது – *பர: ஸந்நிகர்ஷ: ஸம்ஹிதா)* இவ்வாறு உத்தாரமான ஏகாக்ஷர கணேச மந்த்ரமே மந்த்ர சாஸ்திரத்தில் **கணேஶவித்யா** என்றும் ***கணேஶ ப்ரஹ்மோபாஸனா ஞானம்*** என்றும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

7–2. பஞ்சபூத மயமானவரான கணேசப்ரஹ்மம் இந்த மஹா வித்தையின் விளக்கத்தால் தன் பஞ்ச விதமான *பாவங்களை* –பிரிவுகளை நமக்கு தெளிவு படுத்துகிறார்.

1. க என்னும் போது ஸ்ருஷ்டி கர்த்தாவான ப்ரஹ்மா. (ப்ரஹ்மாவுக்கு க என்றும் பெரியோர் கூறுவர்.)
2. ம என்னும் போது ஸ்திதி கர்த்தாவான விஷ்ணு
3. **பிந்து** என்னும் போது ருத்ரன்
4. உச்சரிப்பு என்னும் போது ஸூர்யன்
5. சேர்க்கை என்னும் போது எவற்றையும் இயக்கும் மஹாஶக்தி

இதனால் கணேச கீதை வாக்யப்படி ப்ரஹ்ம, விஷ்ணு, ருத்ரன் என்ற மூன்று ரூபங்களும் ***மோஹரூபங்கள்.*** ஸதாசிவரூபம் ***மோஹமற்றது.*** இந்த நான்கிலிருந்து தோன்றுவது தான் ஸ்வானந்தம் என்கிற ***யோகரூபம்.*** மாயாமயமாக உள்ள இந்த ஐந்திலிருந்து எல்லாம் ச்ருஷ்டிக்கப்பட்டது. எனவே தான் கணேஶ ப்ரஹ்மம் இந்த வடிவமாக இருக்கிறார் என விளங்கிக் கொள்கிறோம்..

7-3. மேலும் கணேசகீதை கணபதி 5 விதமான சித்த வ்ருத்திகளாக நம் சித்தத்தில் வீற்றிருக்கிறார் என்று கூறுகிறது. எவ்வாறெனில்—

க்ஷிப்தம்	பலவகை பொருள்களில் மனம் செல்வது
மூடம்	சோம்பல் முதலியன
விக்ஷிப்தம்	மனம் வெளியில்செல்லும் போது சில சமயம் கட்டுப்படும் நிலை.
ஏகாக்ரம்	ஒன்றிலேயே மனதை நிறுத்துவது.
நிருத்தம்	(நிரோதம்) முழுவதும் அடக்கப்பட்ட மனஸ்

இவ்வாறு சித்தத்தில் நிலைபெறும் கணபதியை அறிந்து கொண்டபின் அடுத்ததாக அனுஷ்டானமுறை கூறப்படுகிறது.

7-4. இந்த ஏகாக்ஷர மஹா மந்த்ரத்துக்கு(வித்யை) ரிஷி என்பவர் (அதாவது மந்த்ரத்ரஷ்டா) கௌணகர். இந்த மந்த்ரத்தின் ஒலி வடிவம் (சந்தஸ்) நிச்ருத் காயத்ரீ. இந்த மந்த்ரத்தின் தேவதை ஸ்ரீகணபதி. நாம் அவருக்கு உவந்தளிக்கும் ஹவிஸ், துதிகள், இவைகளைஏற்று, இஷ்ட தெய்வமாக வீற்றிருப்பவர் கணேசர் என்பது வினியோகம். அதாவது ஸாத்ய — ஸாதன பாவாதீதம். தனிப்பட்ட உபாஸகர்களின் கோரிக்கைகளையும், அது நிறைவேறச் செய்யப்படும் வழிமுறைகளையும் பற்றியதே வினியோகம் என்பதாகும்.

(மந்த்ர ஜபாங்கமான பீஜம், சக்தி, கீலகம், கர, அங்க, நியாஸங்கள், த்யானச்லோகம் என்பதெல்லாம் உபாஸக உலகில் ப்ரஸித்தமாக இருப்பதால் இங்கு அவைகள் விளக்கப்படவில்லை).

7-5. இனி மந்த்ர (வித்யா) வடிவம்

ஓம் கம் இதன் பொருள் ***சக்தியுடனாகிய கணேசப்ரஹ்மம்*** என்பதே. ***க்ருஸப்தே***— என்ற தாதுவிலிருந்து தோன்றியஇந்த மந்த்ரம் ஆத்ம ஸ்வரூப விளக்கமாக உள்ளது.

(குறிப்பு – இதன்பின் கூறும் கணபதயே நமஃ என்பது சில பாடங்களில் காணப்படுகிறது. ஆனால் இது (ந ஸ்ரௌதஃ...) ச்ரௌத பாடமில்லை என்றும் மூலத்திலும் இது காணப்படவில்லை என்றும் ஸுதா உரையின் ஆசிரியர் ஸ்ரீதரசாஸ்திரி கூறுகிறார். ஸம்ப்ரதாய யுக்தமாக நம்மில் பலர் கணபதயே நமஃ என்று கூறுவதைக் காணுகிறோம். மந்த்ர தொடர்ச்சியாக ஒரு முறை கணபதி நாமாவைக் கூறி வணங்குவது தவறாகாது என்றும் இருக்கலாம்)

இத்துடன் 7ம் கண்டம் நிறைவெய்துகிறது.



8ம் கண்டம்

இனி கணேச காயத்ரி கூறப்படுகிறது.

ஏகதந்தாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி ப்ரசோதயாத்

ஏக தந்தரை அறிவோம். வக்ரதுண்டரை த்யானிப்போம். ஸத்தா வடிவினரான கணேசர் நம்மைத் தூண்டுவாராக. பக்தி ஏற்படவும், ஆத்ம ஸ்வரூபம் உணரப்படவும், நம்மைத் தூண்டட்டும். அவனருளால் அவனை உணர்ந்து உய்வோமாக.

8–1. **ஏக தந்த** – ஏக என்னும் பதம் மாயையைக் குறிக்கின்றது. **தந்த** என்னும் பதம் மாயாவி(மாயி)யைக் குறிக்கும். இரண்டின் ஸம்யோகமே **ஏகதந்த** என்பது. **ஏகச்ச, தந்தச்ச** ஏகதந்த என்று த்வந்த ஸமாஸம், ஆனால் இங்கோ த்விவசனத்தில் அமையவில்லையே எனப் பார்த்தால், *ஶக்தி ஶக்தி மதோரபேத தாதாம்ய ஸம்பந்தஃ* என்ற கருத்தில் மாயாவின் முக்கியம் விளங்க ஏக வசனத்தில் என்பது ஸித்தாந்தம். மேலும் கணேசருக்கு ஒரு கொம்புதான். மற்றொரு ஒடிந்த

கொம்பு போரில் ஆயுதமாகப் பயன்பட்டது. ஸமாதான காலத்தில் மஹாபாரதம் எழுத தன் கொம்பைப் பயன்படுத்தினார் கணேசர். இதனால் அவர் ஏகதந்தர் எனப்படுவார். தனது உருவத்துக்கு ஊனம் வந்தாலும் நல்ல காரியம் முடியவேண்டும் என்று எண்ணிய கணபதி த்யாகத்தின் சின்னமாகிறார். ஒரு நல்ல செயலில் ஈடுபடும் போது தன்னிடமுள்ள அரிய பொருளைத் த்யாகம் செய்ய முற்படாதவன் செயற்கரிய செயலை செய்து ஸாதிக்க முடியாது. இந்த தத்வங்களை போதிக்கிறார் கணேசப் பிரம்மம். இவையே **பதி ஞானம் அல்லது பர ஞானத்தின்** அறிகுறி என்பர்.

8–2. அடுத்து **வக்ரம்** என்பது வக்ரமான மாயை. இது மோஹம் கொள்ளச் செய்யும். இத்தகைய மோஹத்தை அழித்து, மாயையைக் கொல்லுகிறவர்தான் வக்ரதுண்டர். மேலும் **வக்ரம்** எனில் கழுத்துக்குக் கீழ் மாயாயுக்த சரீரம். **துண்டம்** என்றால் கழுத்துக்குமேல் முகம் – முக்கிய ப்ரஹ்மமய சரீரம். இவை இரண்டும் இணைந்ததுதான் **வக்ரதுண்டம். வல்லபேசோபநிஷதம்** – **நராகாராமாயா கஜாகாரஃ புருஷஃ** என்கிறது.

8–3. இந்த கணேச காயத்ரீ த்ரிபதா சந்தஸ் எனப்படும். மேற்கொண்டு செய்யப்படும் கர, அங்கன்யாஸங்கள் உபநிஷத்தில் கூறப்படாவிடினும் – பீஜாக்ஷரத்தின் ஆறு தீர்க்கங்களால் செய்யப்படும் என்று அறியவேணும்.(***கம், காம், கீம், கூம், கைம், கௌம், கஃ*** என்றவாறு.)

இத்துடன் 8ம் கண்டம் நிறைவெய்துகிறது.

9ம் கண்டம்

உபநிஷத்தின் தொடக்கத்தில் நாம மந்த்ரம், மத்தியில் ஏகாக்ஷர கணபதி மந்த்ரம், பிறகு அந்தத்தில் காயத்ரீ மந்த்ரம் என மூவகை மந்த்ரங்களை விளக்கியபின் அவைகளின் ப்ரயோகத்தில் உபயோகப்படும் த்யானம் தொடர்கிறது.

ஏகதந்தம் சதுர் ஹஸ்தம் பாசமங்குச தாரிணம்
ரதம் ச வரதம் ஹஸ்தைஃ பிப்ராணம் மூஷகத்வஜம்
ரக்தம் லம்போதரம் ஸூர்ப கர்ணகம் ரக்த வாஸஸம்
ரக்த கந்தானுலிப்தாங்கம் ரக்தபுஷ்பைஃ ஸுபூஜிதம்
பக்தானுகம்பினம் தேவம் ஜகத்காரண மச்யுதம்
ஆவிர்பூதம் ச ஸிருஷ்ட்யாதௌ ப்ரக்ருதேஃ புருஷாத் பதம்(பரம்) ஏவம் த்யாயதியோ நித்யம் ஸ யோகீ யோகீனாம் வரஃ

9–1. ஏகதந்தர்– மாயையைச் செயல்பட செய்பவரென்று முன்பே கண்டோம். முறிந்துபட்ட இடது தந்தத்தை உடையவர் என்பதாம். **பிரஹ்மவைர்த்த புராணத்தில்** பரசுராமருடன் நடந்த போரில் கணேசரின் இடது தந்தம் முறிந்துவிட, அதையே அவர் ஆயுதமாக்கி யுத்தம் செய்தார். ஸ்காந்த புராணத்தில் கார்த்திகேயனுடன் நடந்த போரில் தந்தம் முறிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. கதையின் பேதங்களால், இருவேறு கல்பங்களில் இருவிதமாகவும் நிகழ்ந்திருக்கக் கூடும்.

9–2. சதுர்புஜர் – தேவர், அஸுரர், நரர், நாகர்கள் என நால்வரையும் அவரவர்களின் உறைவிடங்களில் ஸ்தாபித்தவர்இவர். இவரது நான்கு திருக்கரங்களிலும் பாசம், அங்குசம், தந்தம், வரதம் என்று தரித்திருப்பவர். இந்த ஆயுதங்களின் விவரணங்களைக் கண்டோமானால் பாசம் மோஹமயம் என்றும் ஸ்ருஷ்டித் தொழிலைக் குறிக்கும் குறிப்பு எனவும் கொள்ளலாம். அங்குசம் அழிக்கும் தொழிலைக் குறிக்கும்.

அதாவது பக்தர்களின் மோஹத்தை விழுங்கி அங்குசம் என்னும் மாவெட்டியால் துஷ்ட நிக்ரஹம் புரிகிறார். மேற்கண்ட இரண்டையும் பற்றி **பாவனோபநிஷத்** கூறுகிறது இவ்வாறு ***—ராக꞉ பாச꞉ த்வேஷோங்குச꞉*** **தந்தம்** (ஸ்வ விஷாணம் என்பர்) இது ஆயுதமாக அமைந்து சத்ருக்களை அழிக்கிறது. **வரதமுத்ரை** ... பக்தர்களின் விருப்பங்களை உறுதியாக நிறைவேறச் செய்வதை அறிவிக்கிறது.

9–3. **மூஷிகக்கொடி** – இது கணேசரின் கொடி. இதனுடைய சின்னமான மூஷிகம் சில தத்வங்களை போதிக்கிறது. இந்த மூஷிகத்தின் ஸ்வபாவம் என்னவென்றால் – திருடுதல். இதிலிருந்து தெளிவது – ஜீவர்களின் அக்ஞானத்தைத் திருடுகிறது என்பதாகும். மேலும் ஒரு தத்வம் முத்கல புராணம் மூலம் தெரிகிறது. (முஷஸ்தயே என்பது தாது பாடம்). பொதுவாக யாரும் அஹங்கார, மமகார மேலீட்டினால் ***நான் எனது*** என்ற நிலையில் – நான் போக போக்கியங்களைத் தேடி இன்பம் அனுபவிக்கிறேன் – நான் **எனது** பொருளை தானமாக வழங்குகிறேன் என்று கூறுவோம். ***ஸர்வம் ப்ரஹ்ம மயம்*** என்பதை உணராமல் ஸ்வபற்றுடன் செயலாற்றுபவர்களின் இதயத்தில் மூஷிகம் இருந்து அவர்களின் நற்பலனைத் திருடுகிறது – என்கிறது முத்கல புராணம்.

9–4. **ரக்தம்** – கணேசரின் நிறம் சிவப்பு. ஆத்ய தெய்வமான கணேச ப்ரஹ்மம் ப்ரபஞ்சத்தை உற்பத்தி செய்தவரல்லவா? அதுதான் சிவப்பு. ஸ் பெக்ட்ராஸ்கோப்பில் சுத்த வெளிச்சத்திலிருந்து சிவப்பை பிரித்தால் பாக்கி ஆறு வர்ணங்களும் தனித்தனியாக பிரிந்துவிடும். ஒன்று பலவாக ஆகிற ஸ்ருஷ்டி இதுதான். இதனால்தான் கணபதியை சிவப்பு நிறமாகக் கூறுகிறது வேதம். வல்லபேசோபநிஷத்தும் ***வர்ணேஷு ஆத்யம் லோஹிதம் அயம்தேவேஷ்வாதி யத்வாத் ரக்தவர்ணோ(அ)பவது –*** என்பதாக உறுதி செய்கிறது. **லௌஹித்யஸ் தத் விமர்ஶ꞉** – சிவப்பே விமர்சத்தின் லிங்கம் என்பது ப்ரமாணம்.

9–5. **லம்போதரம்** – இவரது வயிறு பெருத்துள்ளது. லயத்திற்கு பின் அண்டங்கள் இவரது வயிற்றுக்குள் அடங்கியிருக்கும் என்பது தத்வம். பிறகு காலாந்தரத்தில் ஸ்ருஷ்டிக்கிறார். எனவே அண்ட சராசரங்களும் வயிற்றில் இருப்பதால் இது பெருத்துள்ளதாம்.

9–6 **சூர்பகர்ணர்** – காதுகள் முறம் போன்று பரந்துள்ளது. முறத்தின் உபயோகமாவது– தானியங்களிலுள்ள உமி, தூசி முதலியவற்றை நீக்குவதாம். எனவே பரந்த காதுள்ள இந்த சூர்பகர்ணர் என்ற பெயருடைய கணேசரும் பக்தர்களின் காதுகளில் நுழைந்து அவர்களுடைய புண்ய, பாப மலமான தூசிகளை நீக்குகிறார்.

9–7. **ரக்தவாஸஸம்** – இவரது உடை சிவப்பு நிறம். மேலும் சிவப்புச் சந்தனப் பூச்சுள்ளவர். சிவப்பு புஷ்பங்களான செந்தாமரை செம்பருத்தி ஆகியவைகளால் அழகுற அர்ச்சிக்கப்படுபவர். இவ்வாறு எல்லாமே சிவப்பு மயமாக சிவப்பு வர்ணமாக இருப்பதற்கு – ரக்தாங்கன் என்ற பக்தனின் பூஜையால் மகிழ்ந்த கணபதி அவனது கோரிக்கையை ஏற்று, தான் ரக்தவர்ணமாக ஆனார் என்ற முத்கலபுராண கதை நமக்குச் சான்றாக இருக்கிறது.

9–8. பக்தர்களின் பக்திக்கு வசமாகி அவர்களிடத்தில் தான் நீங்காமல் இருப்பதாகக் கூறும் அவரை **பக்தானுகம்பிதர்** எனலாம். அதாவது பக்தர்களிடம் கருணை காட்டுபவர்.

9–9. **தேவர்** – முதல்வராக, ஸ்வயம்பிரகாசவடிவினராக இருப்பவர்.

9–10. **ஜகத்காரணமச்யுதம்** – இந்த அண்டங்களுக்கு உபாதான காரணமாகவும், நிமித்த காரணமாகவும் விளங்கும் நிலையில் **தன்னிலையிலிருந்து நழுவாதவர்** என்பதாம். இந்த அண்டத்திலுள்ள அனைத்துப் பொருளுக்கும் கீழ்கண்டவாறு ஆறு நிலைகள் உண்டு.

ஜாயதே – (முன் மறைந்து) தோன்றுதல்
அஸ்தி – இருத்தல்
வர்த்ததே – வளருதல்
விபரிணமதே –மாறுபாடடைதல்
அபக்ஷீயதே – தேய்தல்
நஶ்யதி – மறைதல்

இவ்வாறு பொருட்கள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குச் செல்லும்போது முன்னிலையிலிருந்து நழுவுதல் (ச்யுதி) ஏற்படும். ஆனால் கணேசப்ரஹ்மத்துக்கோ இவ்வித ச்யுதி இல்லை. அவர் நழுவாதவர். அதாவது அச்யுதர். மேலும் ஸம்ஸாரக் கடலிலிருந்து அதில் அகப்பட்டு முழுகிக்கொண்டு இருக்கும் ஜீவர்களை தான் நழுவாமல் நிலையாக இருந்து கொண்டே தூக்கிவிடுபவர் என்றும் கூறலாம்.

9–11. ப்ரபஞ்ச ஸ்ருஷ்ட்யாரம்பத்திலேயிருந்தே தோன்றி விளங்கி ப்ருக்ருதிக்கும் புருஷனுக்கும் அப்பாற்பட்டவர். அதாவது ப்ருக்ருதிக்கும் புருஷனுக்கும் இடையே உள்ள ஆத்ம, வித்யா தத்வங்களான 31 தத்வங்களின் வடிவமாகவே உள்ளவர் கணேசர். அதாவது ஜாக்ரத், ஸ்வப்ன நிலைகளுக்கு சாக்ஷி மாத்ரமாக உள்ளவர். எனவே துரீய ப்ரஹ்மமே கணேசர் எனலாம்.

9–12. இவ்வாறெல்லாம் உணரப்பட்ட கணேசப்ரஹ்மத்தின் குணநலன்களை சிந்தையில் நிறுத்தி அவரையே ஒருமனதாக த்யானிக்கும் உபாஸகன் சுகர், வாமதேவர் போல வணக்கத்துக்குரிய மஹாயோகியாக ஆகிறான். இவ்வாறு சிந்தனா வ்ருத்தியற்ற நிலையிலிருக்கும் யோகியேதான் – யோகிகளுக்குள் சிறந்தவர் என்றபடி ஸாதகனை – உபாஸகனை கணேசர் ஆக்கிவிடுகிறார் என்று உபநிஷத்து உறுதிபட போதிக்கிறது. (பின் மானஸோபசாரம் செய்த பின்பு துதி தொடர்கிறது.)

இத்துடன் 9ம் கண்டம் நிறைவெய்துகிறது.



10—ம் கண்டம்

த்யானத்துக்கு விஷயமாக கணபதியை இனி உபநிஷத்து ஸ்தோத்ரம் செய்கிறது.

நமோ வ்ராதபதயே நமோ கணபதயே நமஃ
ப்ரதமபதயே நமஸ்தே(அ)ஸ்து லம்போதராய
ஏகதந்தாய விக்னநாமினே சிவஸுதாய
ஸ்ரீவரத மூர்த்தயே நமஃ

10.1. (1). வ்ராத என்னும் பதம் தேவர், அஸுரர், மனிதர், விலங்கு என எல்லாவித ஜீவராசிகளையும் குறிக்கும். இவ்வாறான கணபதிக்கு நமஸ்காரம்.

10–2 (2). **கண** என்னும் பதம் ருத்ரகணங்கள், மரீசி முதலான ப்ரஜாபதிகள். பதின்மர் கொண்ட ப்ரஹ்ம கணங்கள், இந்த்ராதி லோக பாலர்கள், பதின்மர் அடங்கிய விஷ்ணு கணங்கள், ம்ருத்யு, காலபைரவாதி சிவகணங்கள், காலங்கள், திசைகள் என அனைத்தையும் குறிக்கும். இவைகளின் பாலகனாக இருக்கும் கணபதிக்கு நமஸ்காரம். அல்லது அதர்வேத ப்ரஸித்தமான ஆயுஷ்ய, ஸ்வஸ்தி முதலிய 18 ஸூத்த கணங்களின் அதிஷ்டான தெய்வமான கணபதிக்கு நமஸ்காரம்.

*(ஸுதா உரையாசிரியர் ஸ்ரீதர சாஸ்திரி தன் உரையில் **ப்ரமதபதி** என்பது இல்லை. **ப்ரதமபதி** என்றுதான் பொருள்செய்யவேணும் என்ற அபிப்ராயம் கூறி விளக்குகிறார். ஸம்ப்ரதாய யுக்தமாக **ப்ரமதபதி** என்றே கூறிவருதும் உண்டு.)*

10–3. (3). **ப்ரதமபதி** – நான்கு வர்ணங்களில் ப்ரதமவர்ணம் ப்ராஹ்மணம். இவர்களில் – வேதம் முறையாக ஓதாதவர், முறையாக ஓதியவர், முறையாக ஓதியதை நினைவில் வைத்துள்ளவர், அதன் பொருளை உணர்ந்தவர், ஞானி,

செயல்திறனுடன் ஒழுகும் ஆசாரசீலர், இவர்கள் எல்லாரும் ஒருவரைக் காட்டிலும் மற்றவர் சிறப்பு காரணமாக முதல்வர் – ப்ரதமமாகிறார். எனவே இவர்களின் பதி – பாலகன் கணபதி – ப்ரதமபதி. மேலும் *ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பதே:*––– என்றவேத வாக்யப்படி எங்கும் எல்லோராலும் எல்லாத் தெய்வங்களுக்கும் முன்னே முதல் தெய்வமாக பூஜிக்கப்படும் காரணத்தால் ப்ரதம பதியாகிறார். மேலும் *அக்னிர்வை தேவாநாமவமோ விஷ்ணு: ப்ரதம:* என்னும் ச்ருதி வாக்யம்– விஷ்ணு என்ற பெயரில் ஜகத்ரக்ஷகராகிய கணபதியைக் குறிப்பிடுவதால் இவர் பிரதமபதியாகிறார். மேலும் *கணேச உத்தரதாபினி* உபநிஷதம் –

ஸப்ரஹ்ம: ஸப்ரஹ்ம ஸப்ரஹ்ம கணேஶ: ஸஶிவ: ஸஶிவ ஸஶிவோ கணேஶ: இந்த்ரோ கணேஶ: விஷ்ணு: கணேஶ: கணேஶோ வை ப்ரஹ்ம தத் வித்யாத்
என்று கணேசரே ப்ரஹ்மம் என்று அறுதியிடுகிறது.

அத்வைதத்தை ப்ரதிபாதனம் செய்யவே அவதரித்த ஸ்ரீசங்கர பகவத்பாதர்கள் விளக்கிய ஷண்மதங்களிலும் ஒவ்வொரு மதத்தின் கடவுளாகவும் வெவ்வேறு உருவம் வணங்கப்பட்டாலும் அதனதன் வணக்கத்துக்கு முதலாக கணபதி வணக்கம் ப்ரதானமாக உள்ளது. எவ்வாறானாலும் முன்பே உபநிஷத்தின் விளக்கங்கள்– எல்லாத் தெய்வங்களின் வடிவமும் கணபதியே என்பதை உறுதி செய்திருக்கிறது. ஆதிகாலம் முதல் வணங்கப்படும் நம்முடைய கணபதி இந்தியாவில் மட்டுமே ஸநாதன தெய்வமாக வணங்கப்படுகிறார் என்பது இல்லை. கடல் கடந்த நாடுகளான கம்போடியா, சீனா, ஜப்பான் ஆகிய தேசத்தார்களாலும் நேபாளம், கோவா ஆகிய நாடுகளிலும் அவர்களின் ஆராதனா தெய்வமாக கணபதி விளங்குகிறார். கி. பி. 889–ல் அதாவது சுமார் 1,115 ஆண்டுகளுக்கு முன்னால் கம்போடியா நாட்டில் யசோவர்மன் என்ற அரசன் இந்து கலாசாரமுடைய கோயில்கள் கட்டியதாகவும், ஸம்ஸ்க்ருத மொழியில் கல்வெட்டுக்கள் செய்தான் என்றும், அதில்
யசோதாச்ரமே ஸ்ரீமத் இந்த்வேத மூர்த்திபி:
சந்தனாத்ரி கணேஶாய சாஸனம் வ்யதாத் இதம்

இவ்வாறு சந்தனமலையில் கணபதிக்கு கோயில் எடுத்த விவரம் உள்ளது என்றும் ஆராய்ச்சியாளர் திரு. டாக்டர் இரா. நாகசாமி கூறியிருக்கிறார். மேலும் ஜப்பான் நாட்டில் பிநாயக்தேன் (விநாயகதேவன்) என்று வழங்கப்பட்டு ஜப்பானிய மொழியிலேயே விநாயகருக்கு மந்த்ரம் கூட உள்ளது என்றும் தெரிய் வருகிறது. பௌத்தமதத்தில் கூட விநாயகருக்கு வழிபாடு உண்டு.

10-4. (4.) அடுத்து ***லம்போதராய*** என்றால் பெரு வயறு உடையவர்.

10-5. (5). ***ஏகதந்தாய*** என்றால் ஒற்றைக் கொம்பு உடையவர். இவருக்கு நமஸ்காரம். அதாவது **ப்ரஹ்மாண்ட பாண்டோதருக்கும் மாயா நிபந்தாவுக்கும்** நமஸ்காரம் என்றாகிறது.

10-6. (6). அடுத்து ***விக்னநாஶர்***— விக்னங்களை நாசம் செய்யும் சிவனின் குமாரனும், வரங்களைப் பக்தர்களுக்கு அருளும் மூர்த்தியுமான கணபதிக்கு நமஸ்காரம். இந்த விக்ன நாஶன், சிவஸுதன் என்ற இரு நாமாவும் புராணாந்தர்கதமான நாமங்களாகவும் தெரிகிறது. **விக்னன்** எனற அசுரனைக் கொன்றவன். அதாவது **அபிநந்தனன்** என்ற அரசன் ஒரு யாகம் செய்தான். அதில் தேவேந்த்ரனுக்கு வழக்கமாகக் கொடுக்கும் ஹவிர்பாகம் கொடுக்கப்படவில்லை. இதனால் கோபமடைந்த இந்த்ரன் **காலபுருஷனைக்** கூப்பிட்டு அந்த யாகத்தை அழிக்கும்படி கட்டளையிட்டான். காலபுருஷனும் அதனை கடமையாக ஏற்று யாகம் பூர்ணம் அடையாமல் விக்னம் செய்தான். அது முதலே எங்கு எந்த நற்காரியம் நடைபெற்றாலும் அதற்கு விக்னம் ஏற்படுத்துவதே அவனின் தொழிலாகி விட்டது. இதனால் அவன் **விக்னாஸுரன்** என ப்ரஸித்தமானான். இவ்வாறான அனர்த்தகரமான நிலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டி வசிஷ்டாதி முனிவர்கள் ப்ரஹ்மாவை சரணடைந்தனர். அவரது யோஜனையின் பேரில் ஸ்ரீகணேசரை வழிபட்டார்கள். பின் கணேசரும் மகிழ்ந்து விக்னாஸுரனை தோல்வியுறச்செய்து அவனை தன் கட்டளைக்குக் கீழ்ப்படியுமாறு செய்தார். மேலும் அந்த விக்னாஸுரனின் வேண்டுகோள்படி தான் விக்னராஜன் என்ற பெயரையும் கொண்டார். ஆனால் கணபதியை வழிபடாமல்,

நினைக்காமல், தொடங்கும் காரியத்தை மட்டுமே அந்த விக்னாஸுரன் இடையூறு செய்யவேணும் என்றும் அவனைப் பணித்தார்.

10 –7. (7).*சிவஸுதன்* – சிவபெருமானே தவம் செய்து கணபதியைத் தன் மகனாக வேண்ட, அதனால் அவரும் தானே சிவஸுதனாக வந்தார் என்ற வரலாறு ஸ்காந்தத்தில் உள்ளது.

10 –8. 8. *ஸ்ரீவரதமூர்த்தி* – விருப்பம், கோரிக்கை என்று கூறுகிற வரம் என்பதை கொடுப்பவர் கணபதி. இவருக்கு நமஸ்காரம். தேவர், தானவர், மானவர்களுக்குகெல்லாம் பலமுறை பல சமயங்களில் வரமளியதைக் குறிக்கிறது இந்த நாமம். ஸ்ரீ என்கிற ஐச்வர்யங்களை அருளும் வரதாயகர் கணபதியே. மேலும் இதுவ்வரை கணேச ப்ரஹ்மம் என்ற பரம்பொருளை மட்டுமே விளக்கி வந்த உபநிஷத் பரம்பொருளோடு கூடிய பராசக்தியை விளக்கி வணங்குகிறது. ஸ்ரீ என்பது ஸித்தலக்ஷ்மி. எனவே ஸித்தலக்ஷ்மியோடு கூடிய மஹாகணபதியான வரதமூர்த்தி என்பதாகிறது.

(குறிப்பு – மூல பாடத்தில் வரதமூர்த்தயே நமஃ என்பதன் முன் ஸ்ரீ என்பது இல்லை என்று ஸுதா உரை ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஆனாலும் ஸ்ரீ இருப்பதே ஒரு விசேஷமாகத் தெரிகிறது.)

இவ்வாறு வ்ராதபதி தொடங்கி வரதமூர்த்தி ஈறாக எட்டு வித நாமங்களைச் சொல்லி நமஸ்காரம் சொல்கிறது உபநிஷத்து. கணபதி 8 என்ற எண்ணில் ப்ரியமுடையவரானதால் இந்த எட்டுவித நாமங்கள் கொண்ட இந்த துதியே கணேசருக்கு மிகவும் பிரியகரமானது என்பது ரஹஸ்ய தாத்பர்யம். இதுவரை பல விதங்களில் ப்ரஹ்ம நிரூபணம் செய்த உபநிஷத்து இனி தொடர்ந்து பலச்ருதியைக் கூறப்போகிறது. எனவே, இந்த ப்ரஹ்ம நிரூபண கண்டம் இத்துடன் நிறைவெய்துகிறது.

(குறிப்பு – உபநிஷத்து பாராயணம் – ஆவ்ருத்தி செய்யும் காலங்களில் இந்த 10 கண்டம் வரைதான் ஸங்க்யை கணக்கிடுவார்கள். கடைசியில் ஒரே தடவை பலஶ்ருதியை படிப்பது வழக்கம்.)

(இத்துடன் 10 – ம் கண்டம் நிறைவெய்துகிறது.)

11–ம் கண்டம்.

ஏததர்வசீர்ஷம் யோ(அ)தீதே ஸ ப்ரஹ்ம பூயாய கல்பதே ஸ ஸர்வதஃ ஸுகமேததே ஸ ஸர்வ விக்னைர்ந பாத்யதே ஸ பஞ்ச மஹாபாபாத் ப்ரமுச்யதே ஸாயமதீயானோ திவஸக்ருதம் பாபம் நாஶயதி ப்ராதரதீயானோ ராத்ரீக்ருதம் பாபம் நாஶயதி ஸாயம் ப்ராதஃ ப்ரயுஞ்ஜானோ அபாபோ பவதி ஸர்வத்ராதீயானோ(அ) பவிக்னோ பவதி தர்மார்த்த காம மோக்ஷம் ச விந்ததி இதமதர்வசீர்ஷமசிஷ்யாய ந தேயம் யோ யதி மோஹாத் தாஸ்யதி ஸ பாபீயான் பவதி

11–1. இதில் இனி இதன் பாராயணத்தால் ஏற்படும் பலன்கள் கூறப்படுகிறது. அதர்வ முனிவரால் கண்டு வெளியிடப்பட்ட வேத சிரோ பாகம் என்ற நிலையில் உள்ள இந்த உபநிடதத்தை குரு முகமாக அத்யயனம் செய்ய வேண்டும். ச்ரத்தையோடுகூட பயின்று தெளிவு பெறும் ஸாதகர் – ***ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி*** என்றபடி ப்ரஹ்மமாகவே ஆகிவிடுவார்.

11–2. மனிதர்கள் புருஷார்த்தங்களை நாடிச் செல்கிறார்கள் அல்லவா. அதனால் அவர்களுக்கு ஏற்படும் இடையூறுகள் ஏராளம். விக்னங்கள் அதிகம், காலரூபமான இந்த விக்னங்களை கணேசர் நாசம் செய்கிறார். மேலும் இந்த உபநிடத்தை பாராயணம் செய்பவர்களுக்கு ஏற்படும் ஆத்யாத்மிக, ஆதி தெய்வீக, ஆதி பௌதீகம் என்றதான தாபத்ரயங்கள் ரூபமான விக்னங்களை விலக்கி, அவர்களுக்கு எல்லா வகையான முன்னேற்றங்களும் ஏற்படும் வண்ணம் அருளுகிறார்.

11–3. பஞ்ச மஹா பாபங்களான கள், களவு; கொலை முதலானவற்றிலிருந்தும், அவைகளைச் செய்யும் பாபிகளுடன் தொடர்பு என்ற பாபத்திலிருந்ததும் இந்த ஸாதகன் விடுதலை பெறுகிறான்.

11–4. இந்த பாராயணம் மாலையில் செய்யும்போது அவனால் பகலில் அறியாமல் செய்த தவறுகளால் ஏற்படும் பாபங்களைப் போக்குகிறது. அதுபோல் காலையில் செய்யும் பாராயணம் இரவில் நேரும் பாபங்களைப் போக்கவல்லதாம். இவ்வாறு இரு வேளைகளிலும் செய்யும் பாராயணமானது இந்த உபாஸகனை **அபாபனாக** அதாவது பாபமே செய்யாதவனாக ஆக்கி விடுகிறது.

11–5. எல்லாவிதமான காரியங்களிலும் அவைகள் தடையின்றி நல்லவிதமாக நிறைவெய்த இது பாராயணம் செய்யக்கூடியதாம். நமது வாழ்வு பயனுடையதாக – வேண்டுவது கிடைக்க வேண்டும். வேண்டாதது விலகிச் செல்லவேண்டும். இதற்கு உபாயமே **தர்மம்,** இது இவனுக்கு கைகூடுகிறது. பிறகு எதையும் ஸாதிக்கவல்ல **அர்த்தம்** (பொருள்) கிடைக்கும். மேற்கண்ட தர்மம், அர்த்தம் இரண்டையும் **நியாயமான வழியில்** பெறுவேன் என்ற நல்ல ஸங்கல்பம்தான் **காமம்** எனப்படும். இதுவும் கைகூடுகிறது. கடைசியில் இம்மை, மறுமை இன்ப நுகர்ச்சியில் உள்ள ஆசை, மோஹம், வேகம் நீங்கிவிடவே வைராக்யம் என்பது கிட்டி, விடுதலை நாட்டத்தில் ஆத்ம நிஷ்டையும் ஸாதகன் அடைகிறான். இதனால் அவனுக்கு இறுதியில் கிரமமுக்தி அதாவது **மோக்ஷம்** கிடைக்கிறது.

11–6. இதன்பின் அதிகாரி லக்ஷணம் கூறப்படுகிறது. அத்யயனம் என்றபோது–ஆசார்யபூர்வரூபம்– அந்தே வாஸ்யுத்தர **ரூபம்** என்றபடி, குரு சிஷ்யர்கள் முக்யத்வம் பெறுவதும், கல்வியின் தரம் குறைந்தழிவதைத் தடுக்கக் கருதி அதிகாரி நிர்ணயம் செய்வதும் அத்யாவசியமாகிறது. ஆத்ம வித்தையின் அத்யயனத்தில் **அதிகாரி** (அதிகாரம் உள்ளவர்கள்) பற்றி ஸ்ரீபகவத்பாதர்களின் ப்ரமாணம் கூறுகிறது.

ப்ரசாந்த சித்தாய ஜிதேந்திரியாய ப்ரஹீணதோபாய யதோக்தகாரிணே குணான் விதாயாநுகதாய ஸர்வதா ப்ரதேயமேதத் ஸததம் முமுக்ஷவே

இவ்வாறு சிஷ்யத் தகுதி பொருந்தியவருக்கு இதனை உபதேசிக்கலாம். மற்றவர்களைத்தான் இந்தஉபநிடதம் இங்கு ***அசிஷ்யாய*** என்று குறிப்பிடுவதாகக் கருதவேண்டும்.

இவ்வாறு தகுதியற்றவருக்கு ஒருபோதும் உபதேசிக்கலாகாது. மேலும் மோஹம், பொருள், பணிவிடை மீதுள்ள ஆசை இவைகள் காரணமாக எவரேனும் அவர்களுக்கு உபதேசிப்பார்களானால் அவர்கள் பாபம் செய்தவராகிறார். என்று உறுதிபடக் கூறுகிறது உபநிடதம். இனி அடுத்த கண்டத்தில் வினியோகம் பற்றி விளக்கம் சொல்லப்படுகிறது.

இவண் 11–ம் கண்டம் நிறைவெய்துகிறது.

12–ம் கண்டம்

ஸஹஸ்ரா வர்த்தநாத் யம் யம் காம மதீதே தம் தமனேன ஸாதயேத் அனேன கணபதிமபிஷிஞ்சதி ஸவாக்மீ பவதி சதுர்த்யாம(அ)னஶ்னன் ஜபதி ஸவித்யாவான் பவதி இத்யதர்வண வாக்யம் ப்ரஹ்மாத்யா சரணம் வித்யாத் ந பிபேதி கதாசனேதி

12–1 இவ்வுலகில் கோரின பலன்கள் நிறைவெய்தவும், இஷ்டமான ஸித்திக்கும் இந்த உபநிடதத்தை 1,000 முறை பாராயணம் செய்யவேண்டும். இதேபோல் கணபதிக்கு அபிஷேகம் செய்தால் பார்புகழக்கூடிய வாக்குவன்மை உடையவராக ஆகலாம். சுக்லபக்ஷ, க்ருஷ்ணபக்ஷ சதுர்த்தி திதிகளில் உபவாஸத்துடன் கூடினவராக ஆயிரம் முறை பாராயணம் செய்பவர் இஹ – பர உலகங்களுக்குத் தேவையான இருவிதமான கல்வி கேள்விகளிலும் சிறப்படைவார்கள். இதுவே அதர்வ முனிவரின் ஸத்யவாசகம். இவரது வாக்கானது நடுவிலே வைக்கப்பட்ட தீபஜோதி போல எங்கும் பிரகாசமாக அமைந்துள்ளது. இந்த அண்டங்களுக்கு ஆதியான ஹிரண்யகர்ப்பர் முதல் சிறிய எறும்பு வரை எல்லாம் மாயா ப்ரபாவமே, என்பதை அறிந்து உணர்ந்தவன் எப்போதும் எதனிடமிருந்தும் எங்கிருந்தும் பயப்படுவதில்லை.

இறுதியில் – **இதி** (இவ்வாறு) என்று இத்துடன் இந்த கண்டம் நிறைவெய்துகிறது.



13–ம் கண்டம்

யோ தூர்வாங்குரைர் யஜதி ஸ வைச்ரவணோபமோ பவதி யோ லாஜைர் யஜதி ஸ யஶோவான் பவதி ஸ மேதாவான் பவதி யோ மோதக ஸஹஸ்ரேண யஜதி ஸ வாஞ்சித பலம் அவாப்னோதி யஃ ஸாஜ்ய ஸமித் பிர் யஜதி ஸ ஸர்வம் லபதே ஸ ஸர்வம் லபதே

இனிகணபதிக்குரிய விருப்பமான திரவ்யங்களால் செய்யப்படும் ஹோமங்கள் – பலன்கள் பற்றி கூறப்படுகிறது.

13–1. மூன்று நுனிக் கொத்துடைய அருகம்புற்களால் 1,000 முறை ஹோமம் (ஆஹுதி) செய்பவர் குபேரனைப்போல் மிகுந்த செல்வந்தனாவார். நெற்பொறிகளால் 1,000 முறை ஹோமம் செய்பவர் பெரும் புகழை அடைகிறார். மேலும் நல்ல அறிவுடைய மேதாவியாகவும் ஆகிறார். கொழுக்கட்டைகளால் 1,000 முறை ஹோமம் செய்பவர் தான்நினைத்ததை அவ்வாறே அடையக் காண்கிறார். இதேபோல நெய்யிலே தோய்த்த ஸமித்துக்களினால் ஒருவன் 1,000 முறை ஹோமம் செய்யும் போது அவன் நினைத்தது எல்லாமே அவனுக்கு கிட்டிவிடுகிறது. எல்லாமும் கிடைத்துவிடுகிறது. *ஸர்வம் லபதே* என்பது இங்கு இருமுறை கூறப்பட்டதற்கு ஸாதகனின் விருப்பம் நிறைவேறுவது உறுதியே என்பதை கண்டிப்பாக உணர்த்தவே என்பதை அறியவேணும்.

இனி இதில் சில தத்வார்த்தம் காணுவோம். ஒரு இடத்தில் கூறப்பட்ட 1,000 முறை கணக்கை – யோக விபாகம் செய்து மற்ற வாக்யங்களுடன் சேர்த்துப் பொருள் காணவேணுமென்பது மரபு. ஹோம த்ரவ்யங்களின் பரிமாணம் பற்றி *சாரதா திலகம்* கூறுகிறது–

தூர்வா த்ரயம் ஸமுத்திஷ்டம் லாஜாஃ ஸ்யுர்முஷ்டி பலம் விதாஃ ஏகைகம் பத்ரபுஷ்பாணி ததா(அ) பூபானி கல்பயேத் (மோதகச்சாபூப ஜாதீய ஏவ) ஸமிதஃ ஸ்யுர் தசாங்குலாஃ

அதாவது – ஒரு ஆஹுதி என்பது – அருகம்புற்களில் மூன்று நுனி கொண்டது. நெற்பொறி ஒரு கைப்பிடியளவு. பத்ரம், புஷ்பம், மோதகம், அபூபம் (அதிரஸம்) இவைகள் ஒன்றொன்று, ஸமித்து 10 அங்குல நீளத்தில் ஒன்று. இதுவே ஹோம பரிமாணமாக, ஸம்ப்ரதாய யுக்தமாக ஆன்றோர்களால் பரவலாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஸமித்துக்களில் கணபதிக்கு சிறப்புடையது வன்னி. இரண்டாவதாக வெள்ளை எருக்கு (ச்வேதார்க்கம்) உபயோகம் உண்டு. பொதுவாக ப்ரத்யேகமான, ஏற்புடைய த்ரவ்யம் கிடைக்காத காலத்தில் யதா ***ஸம்பவத் த்ரவ்யைஃ*** என்றபடி பலாசமோ, அரசோகூட ஸ்வீகரிக்கலாம் என்பர். ச்ராவண மாஸ மஹாத்மியம் – என்ற நூலில் மோதகம் என்பது எள், நெய், சர்க்கரை சேர்ந்ததாக காண்கிறது. ***(தில ஸம்யுக்த க்ருத சர்க்கரான் விதம் மோதகம் குர்யாத்.)*** இதுவும்கூட நம் அனுஷ்டானத்தில் ஏற்புடையதே. எவ்வாறெனில் – எள் கொழுக்கட்டை என்ற பெயரில் ஆவணிமாத விநாயக சதுர்த்தி விரதத்தில் இதுபோல் செய்வது தெரிந்ததே.

மேலும் இனி செய்யப்போகும் சில த்ரவ்யங்களின் தத்வார்த்தமானது கணேச ப்ரஹ்மத்தை துரீய நிலையில் விளக்கம் கூறும் உபநிடத்தின் தாத்பர்யத்துக்கு மிகவும் அனுகுணமே.

13–2. 1. அருகம்புல் – தூர்வா

இந்த பதம் கடபயாதி ஸங்க்யா சாஸ்த்ரத்தின்படி 48 என்ற எண். இந்த 48 என்ற எண் இன்னும் சில பதங்களுடன் ஒற்றுமைப்படுகிறது காண்லாம்.

ஜீவஃ = 48. தேவஃ = 48.

இதன் தத்வம் யாதென்றால் – இந்த தூர்வா – மூலவேர் தெரியாமல் – பல வேர்கள் விட்டு தொடர்ந்து நீண்டு செல்லக்கூடியது. அதுபோல ஜீவனும் – மூல ஜன்மா தெரியாமல் பிறந்து பிறந்து சென்றுகொண்டே இருக்கிறான். இவ்வாறானவன் மூலமான தேவனுடன் சென்றடைய

வேண்டியவன். எனவேதான் ஜீவனுடைய திருபுடிகள் ஒழிவான் வேண்டி – அவனது ஜன்மத்தொடர்பு விடவேண்டி – அக்னியிலே இவனது ஜீவ பதத்தை நினைவூட்டும் தூர்வாவினால் ஹோமம் விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு கருத்து – வேதஃ என்ற பதமும் 48 தான். இதிலுள்ள 4– வேதங்களையும், 8 புர்யஷ்டகரான கணேச ப்ரஹ்மத்தையும் தான் குறிக்கிறது. (புர்யஷ்டகம்– (1) கர்மேந்த்ரியம் –5, (2) ஞானேந்திரியம் –5, (3) அந்தகரணம் –4, (4) பஞ்சப்ராணம், (5) பஞ்சபூதம், (6) காலம், (7) கர்மா, (8) அவித்யை இதன் ஈஸ்வரத் தன்மையோடு கூடியவர்.) எனவே இவர் வேதத்தின் துணையினால் 84 லக்ஷவிதமான யோனி ஜன்மங்களை உண்டு பண்ணி காத்து லயப்படுத்துகிறார் என்று உணருகிறோம்.

13–3. 2. லாஜம் – நெற்பொறி–

நன்கு வெயிலில் காய்ந்த நெல்லை அடுப்பில் சூடேற்றின வாணெலியில் மணலோடு சேர்த்து சூடு செய்து வறுத்தபின் உமி விலகி வெள்ளையான பொறி கிடைக்கிறது. இதுபோல் ஸாதகனும் தன்னுடைய தபஸினால் மனதை பக்குவப்படுத்தி அந்த தபோக்னியாலே தன் ஜீவ பீஜத்தை விசுத்த ஸத்வகுண ரூபமாக மாற்றுகிறான். இதனைத்தான் பூஜ்யஸ்ரீ அனந்தாநந்தநாதரவர்கள் – *தபோவிசுத்த ஸத்வகுண ரூப லாஜம்* என்கிறார்.

13–4. 3. மோதகம் – (கொழுக்கட்டை)

மாவினால் செய்யப்பட்ட கவசத்திற்குள் ரஸமயமான பூர்ணம் வைக்கப்பட்டதும் உருண்டையானதுமான பதார்த்தமே மோதகம். இது பரம்பொருள் தன்மையும், ஜகத்தின் பரிணாமத்தையும் குறிப்பால் உணர்த்துகிறது. அஸ்தி – பாதி– பிரியம் என்ற மூன்றும் – பரம்பொருள் இயல்பாகவும், இந்த மூன்றுடனும், நாமம் ரூபம் சேர்ந்தது ஜகத்தின் நிலையாகவும் வேதாந்தம் கூறும்.

இருக்கிறது	—	அஸ்தி	—	பரம்பொருள் (ப்ரஹ்மம்)
ப்ரகாசிக்கிறது	—	பாதி	—	,,
ஆனந்தமாக இருக்கிறது	—	ப்ரியம்	—	,,
பெயருடன் கூடினது	—	நாமம்	—	ஜகத்
உருவுடன் கூடினது	—	ரூபம்	—	,,

ஜகத் — முதல் மூன்றும் கொண்டு பின்னிரண்டுடனும் உள்ளது. அதாவது பரம்பொருளிலிருந்து மாற்றிக்காட்டும் நிலையில் நாமமும் ரூபமும் உடையதாகிறது. ஜகத்தின் உருண்டையான மாயாந்தகாரமான இந்த நாமம், ரூபம் என்றதான ஆவரணம் (மறைப்பு) நீங்கும் காலத்தில் முதல் மூன்றின் உண்மைத் தன்மையால் இதுவும் பரம்பொருளே என்ற நிலை ஸித்திக்கிறது. எவ்வாறு பாம்பின் நினைவு அகன்றவுடன் பழுதைஎன்ற அதிஷ்டானம் (இருப்பு) விளங்குகிறதோ அதுபோல இங்கு கொழுக்கட்டை என்ற பெயரும், உருண்டை என்ற ரூபமும் விலகிய காலத்தில் உள்ளே விளங்கும் ஸச்சிதானந்தமயமான அதாவது அஸ்தி, பாதி, ப்ரியத்தோடு கூடின பூர்ணவஸ்து நிறைந்த பரம்பொருள் தத்வம் விளங்குகிறது. இதையேதான் *நாநாரூப கவசாச்சாதித ஸச்சிதானந்த பூர்ண மோதகம்.* என்று பூஜ்யஸ்ரீ அநந்தானந்த நாதர் அவர்கள் விளக்குகிறார்.

இந்த உபநிஷத்தினால் முன்கூறிய 10 கண்டங்களால் ஒவ்வொரு கண்டத்துக்கும் ஒரு ஆஹுதியாக (10 ஆஹுதிகள்) ஹோமம் செய்வதும் உண்டு. இனி புரஸ்சரணம் என்ற முறையும், மந்த்ரதான முறையும் ஸித்திக்கான தேசகாலம் முதலியனவும் கூறப்பட இருக்கிறது.

இவண் 13ம் கண்டம் நிறைவெய்துகிறது.



14-ம் கண்டம்

அஷ்டௌ ப்ராஹ்மணான் ஸம்யக் க்ராஹயித்வா ஸூர்ய வர்ச்சஸ்வீ பவதி ஸூர்ய க்ரஹே மஹா நத்யாம் ப்ரதிமா ஸந்நிதௌ வா ஜப்த்வா ஸித்தமந்த்ரோ பவதி மஹா விக்னாத் ப்ரமுச்யதே மஹா தோஷாத் ப்ரமுச்யதே மஹா பாபாத் ப்ரமுச்யதே ஸ ஸர்வவித் பவதி ஸ ஸர்வவித் பவதி ய ஏவம் வேத இத்யுபநிஷத்

14–1. மந்த்ரதான முறை – இந்த கணபத்யர்வ சீர்ஷோபநிஷத் என்பது அதர்வசீர்ஷோபநிஷத் பஞ்சகத்தில் ஒன்று ஆகும். இதனை எட்டு ப்ராஹ்மணர்களுக்கு விதிமுறைப்படி அத்யயனம் செய்விப்பவர் ஸூர்யனைப்போல் மஹா தேஜஸ்வியாக ஆகி ஸர்வக்ஞனாகவும் ஆகிறார். இங்கு 8 என்ற இந்த எண் முன்பே விளக்கியபடி புர்யஷ்டகாகாரர் என்பதாலும், அவருக்குப் பிரிய த்ரவ்யமான அஷ்டத்ரவ்யத்தில் மோதகம், அபூபம், பழம், கரும்புத்துண்டு இவைகளை 8 என்ற எண்ணிக்கையிலும் அவல், நெல்பொரி இவைகளை 8 முஷ்டியளவாகவும், எள்ளு 8 சிட்டிகையாகவும், தேங்காய் 8 பாகமாகவும் கலந்து ஹோமம் செய்வதில் ப்ரியமுடையவராதலாலும் இங்கு 8 பேருக்கு அத்யயனம் செய்விக்க உபநிஷதம் கூறுகிறது என்று உணரலாம்.

14–2. ஸூர்ய க்ரஹணகாலத்தில் (அதாவது ஸ்பர்ஶகாலம் முதல் மோக்ஷகாலம் வரை) மஹாநதிகளின் தீரத்திலோ, கணேசரின் ஸாந்நித்யம் பிரகாசிக்கும் க்ஷேத்ரங்களிலோ, வீடுகளிலுள்ள விக்ரஹத்திலோ, புரச்சரண முறைப்படி இந்த உபநிஷதம் மற்றும் இதில் கூறப்பட்ட ஏகாக்ஷர கணபதிவித்யை ஜபித்து அதனால் மந்த்ர ஸித்திகளை ஒரு ஸாதகன் அடைகிறான். இங்கு **மஹாநதி** என்றால் அதன் உற்பத்தி தொடங்கி கடைசியில் கடலில் சேரும்வரை அதாகவே ஓடும் நதிகளுக்குப் பெயராகும்.

இதற்கு உதாரணமாக கீழ்வரும் நதிகளைக் கூறலாம். கோதாவரி, பாகீரதி, நர்மதா, யமுனா, துங்கபத்ரா, காவேரி, கிருஷ்ணா, வேணி, பூர்ணா, பயோஷ்ணி, மந்தாகினி, ஸிந்து, தாம்ரபர்ணி.

14–3. **கணேசரின் ஸாந்நித்யம் விளங்குமிடம்**— மயூரேஶ்வரம், கணபதிஅக்ரஹாரம், திருவலஞ்சுழி, மலைக்கோட்டை, திருப்புறம்பியம், பிள்ளையார்பட்டி என அநேகம் கூறலாம்.

14–4. மேற்கண்டவாறு உபாஸித்து, ஜபித்து, ஸித்தியடைந்தவர்கள் மஹா விக்னங்கள், மஹா தோஷங்கள், மஹா பாபங்கள் அனைத்தும் நீங்கப்பெற்று அமைகிறார்கள். இதில் **மஹா விக்னங்கள்** என்றால் காலவிக்னம் தான். அதாவது ஜகத்ரூபம், பிரதிபந்தகம், ஸத்பாவரூபம் என்ற நிலையில் உள்ளவை. இவைகள்(ஹரணம்) நாசம் செய்யப்படுவதால் ஸாதகனுக்கு ஆத்மஸித்தி ஏற்பட்டுவிடுகிறது. **மஹா தோஷங்கள்** என்றால் ஜீவனுக்கு ஏற்பட்டுள்ள மாயா ரூபமான ஸம்ஸார தோஷம், அவித்யாபாசம் எனப்படும். இவைகள் மந்த்ர ஸித்தியினால் நீங்கிவிடுவதனால் ஸாதகர் ஸூத்தக்ஞான கணேச ப்ரஹ்மமாகவே ஆகிவிடுகிறார். எனவே இந்த உபநிடதத்தை மேலே விவரித்தபடி, எவர் நன்றாக உணர்கிறார்களோ அவர்கள் எல்லாவற்றையும் பொதுவாக அறிகிறார்கள். மேலும் சிறப்பாகவும் அறிகிறார்கள். இதனால் தான் பொது அறிவு விசேஷ அறிவு என்பதற்காக, உபநிடதம் **ஸ ஸர்வவித் பவதி** என்பதை இருமுறை கூறி உறுதி செய்கிறது. பெரியோர்கள் வாக்கை ஸத்யமாகக் கொண்டு இந்த உபநிடதம் காலத்தால் அழிவுறாது, என்றும் சாசுவதமாக இருந்து தன்னை உபாஸிக்கும் ஸாதகனை பூர்ண ஞானப்ராப்தி உடையவனாக ஆக்கும் என்று உறுதியாக நம்புகிறோம். கணேச உபாஸனா ரஹஸ்யத்தை விளக்கிச் சொல்லும் இந்த உபநிஷத்து ஸாதகர்களால் அவசியம் பாராயணம் செய்யத்தக்கது என்பது நன்றாக விளங்குகிறது.

இத்துடன் ஸ்ரீ கணேசாதர்வசீர்ஷம் என்ற உபநிடதத்தின் (தாத்பர்யம்) விளக்கம் ஒருவாறு ஸ்ரீஸத்குரு அருளால் முட்டின்றி முடிந்தது. பெரியோர் இதில் காணும் பிழைகளைப் பொறுத்து மன்னிப்பாராக. இந்த பரம்பொருளின் விளக்கமானது என்றுமே யாராலும் கூறி முடிக்க முடியாது – முடிவடையாது என்பதை எண்ணி, ஸத்குரு வடிவமான ஸ்ரீ மஹா கணபதி நம்மையெல்லாம் எக்காலத்திலும் நல்வழியிலேயே செயல்பட வைக்குமாறு வேண்டுவோம்.

இந்த உபநிடதம் ***ஸஹநாவவது*** என்ற சாந்தி பாடம் கூறி முடிப்பது ஸம்ப்ரதாய யுக்தமாக உள்ளது கருதி நாமும் அதனைக் கூறுவோம்.

ஓம் ஸஹநாவவது ஸஹனௌபுனக்து
ஸஹவீர்யம் கரவாவஹை
தேஜஸ்வினாவதீதமஸ்துமாவித்விஷாவஹை ஃ
ஓம் ஶாந்திஃ ஶாந்திஃ ஶாந்திஃ



2. ஸ்ரீ கணேசமூல மந்த்ர பதமாலா

எழுதியவர் – பூஜ்யஸ்ரீ அனந்தாநந்தநாதர் (ஸி.வி ஸ்வாமி சாஸ்திரிகள்)
தமிழுரை – ஸ்ரீ அருள்சக்தி நாகராஜன்

குருவடிவாகி குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
....
தத்துவ நிலையைத் தந்து எனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

என்றாள் ஔவையார் ஸ்ரீவிநாயகர் அகவலில்.

ஸ்ரீகுருவும், ஸ்வாமியும் வேறல்ல, குரு, மந்த்ரம், தேவதை மூன்றும் ஒன்றே என்று இந்த கணேச மூலமந்த்ர பதமாலாவை இயற்றியவரான ஸ்ரீவித்யா வாசஸ்பதி, ஸ்ரீவித்யா மார்த்தாண்ட (ஸ்ரீ ஸி.வி.ஸ்வாமி சாஸ்த்ரிகள்) ஸ்ரீ அனந்தானந்த நாதரவர்கள் அடிக்கடி வலியுறுத்துவார்கள். அவர்கள் சிறந்த ஸத்குருவாக விளங்குகிறவர்கள். ஸ்ரீவித்யா ஸபர்யையில் ஆழ்ந்த ஞானமுடைய ஆத்ம ஞானி. அவர்கள் இதோடு கூட பலவிதமான க்ரந்தங்களையும், கவிதைகளையும் அருளியிருக்கிறார்கள்.

தனதான்மாவிற்கு வேறுபடாததான ஸ்ரீமஹாகணபதிக் கென்றே தனியாக ஸ்ரீமஹாகணபதி ஸபர்யா பத்ததியை விளக்கி தனிச்சிறப்பு பெற்ற அவர்களால் இயற்றப்பட்ட இந்த மூலமந்த்ர பதமாலா சொல்லிலும், பொருளிலும் நிகரற்று விளங்குகிறது. மஹாகவி காளிதாஸன் போன்றோரது கவிதைகளுடன் இது போட்டி போடுகிறது வெறும் கவிதா நயம் மட்டுமின்றி (அர்த்த) ஞான விகஸிப்பாலும், அனுக்ரஹ ஆற்றலிலும் இது சிறந்து விளங்குவதொன்று.

பக்குவடைந்த ஜீவர்கள் கடைத்தேறவே பரம்பொருள் குருவடிவாகி குவலயம் தன்னில் திருவடி வைத்து இறங்கி வருகின்றது. தத்துவ நிலையைத் தந்து ஆட்கொள்ள உபதேசம் தேவை. மந்த்ர மூலம் குரோர் வாக்யமல்லவா? இங்கு ஸ்ரீமஹா கணபதியான பரம்பொருளாம் தனதான்ம ஸ்வரூப விளக்கத்திற்கு அவரது (ஸ்ரீமஹாகணபதியின்) மந்த்ரம் மூலமாக அமைகிறது. மூலமதை அறிந்து விட்டால் அவனே முழுமை பெற்றவனாகிறான். அர்த்த ஞானமில்லாமல் சொல்வதானது அணைந்த அக்னியில் உலர்ந்த விரகைப் போட்டாலும் எப்படி ஜொலிக்காதோ அவ்விதம் பலன் தராது– என்று தேவீபுராணம் பகர்கிறது. எனவே அஞ்சக்கரத்தின் அரும்பொருள்தன்னை நெஞ்சக்கருத்தின் நிலையறிவிக்க அர்த்த ஞானம் அவசியம். அர்த்தம் புரிபடவும் ஆசானின் அமுத வாக்கே ஆதியாதலின் ஸ்ரீஸத்குருவானவர் அர்த்தத்தோடு உபதேசம் செய்கிறார்.

ஸ்ரீகணபதி ப்ரணவ ஸ்வரூபமானவர். ப்ரணவத்திற்கு அர்த்தத்தை ஸ்ரீஸ்வாமி நாதர்தானே அருளமுடியும். 14 ஸ்லோகங்களில் 14 பதமாக ஸ்ரீமஹாகணபதியின் 28 அக்ஷர மூலமந்த்ரம் இதில் உத்தாரம் செய்யப்படுகிறது. அதோடு அதன் அர்த்தமும் மாலையாக தொடுக்கப்பட்டிருக்கிறது. பதினைந்து ஸ்லோகங்கள் புஷ்பங்களாக உள்ளது. இதன் ஒவ்வொரு ஸ்லோகமும் ஒவ்வொரு மலராகி மஹாகணபதிக்கு மாலையாகிறது. சொற்குற்றம், பொருட்குற்றம் அடியேனுடையது. குணங்கள் மஹத்துக்களுடையது.

ஓமித்யேததஜஸ்ய கண்டவிவரம் பித்வா பஹிர் நிர்கதம் ச
ஓமித்யேவ ஸமஸ்த கர்மரிஷிபி ப்ராரப்யதே மானுஷைஃ
ஓமித்யேவ ஸதாஜபந்தி யதயஃ ஸ்வாத்மைக நிஷ்டாஃ பரம்,ச
ஓங்காராக்ருதி வக்த்ர மிந்துநிடிலம் விக்னேஸ்வரம் பாவயே

28 அக்ஷரமந்தரத்தின் முதல் பீஜம் ஓம்

உரை—ஓங்காரமாகிற ப்ரணவம் ச்ருஷ்டியின் தொடக்கத்தில் ப்ரஹ்மாவினுடைய தொண்டை (கண்டகுஹரம்)க்குழியை உடைத்துக் கொண்டு வெளியே வந்தது.

ஓங்காரமான ப்ரணவ உச்சரிப்பினாலேதான் மஹரிஷிகள், மனிதர்கள் ஆகியவர்களின் கர்மஸமுதாயம் எல்லாமே ஆரம்பமாயிற்று. தன் ஸொந்த ஆத்மாவை அறிகிற ப்ரஹ்ம நிஷ்டர்களான ஸன்யாசிகள் ஓங்காரத்தை எப்போதும் ஜபித்துக்கொண்டே இருக்கிறார்கள். ஓங்காரமான ப்ரணவமாக இருக்கிற முகத்தின் (வக்ரதுண்டம்) நெற்றியில் ஸாதாக்ய சந்த்ரகலா ப்ரகாசிக்கும்படியான விக்னேசுவரரை ஸதா பாவனை செய்கிறேன். (அஜஸ்ய = ப்ரஹ்மா, யதய= ஸன்யாசிகள், யதிகள்)

விளக்கவுரை—

1) ஆலம் விதை எவ்வாறு காயை பிளந்துக்கொண்டு தன் ஜீவத்துவத்துவத்தை தொடங்குகிறதோ அவ்வாறு தான் ப்ரஹ்மாவின் சிருஷ்டியும். (ஒப்பு) தத்ஸ்ருஷ்ட்வா ததேவானுப்ராவிசத் ததனுப்ரவிச்ய — தை ஆனந்தவல்லி.

2) ச்ருஷ்டி, இதனால் கர்மா, அதனைச் செய்யும் ஆத்மநிஷ்டர்கள் என்று வரிசைப்படுத்திய கவி — ஸகல ஜீவராசிகளும் அமிர்த நிலையடையவேணுமென்ற பரந்த எண்ணமுடையவராகி அமிர்தப்ரதமான 16 எண் ஞாபகம் வந்தவராகி, ஸாதாக்ய கலை — அதாவது அமிர்தகலையையுடைய சந்த்ரனை விக்னேசுவரரின் திரு நெற்றியில் கண்டு மகிழ்கிறார்.

ஞ்ரீம்பீஜம் ப்ரமதுக்க ஜன்ம மரண வ்யாத்யாதி பீ நாசகம்
ம்ருத்யு க்ரோதன சாந்தி பிந்து விலஸத்வர்ணாக்ருதி ஞ்ரீப்ரதம்
ஸ்வாந்தஸ்தாத்மசரஸ்ய லஷ்யமஜர ஸ்வாத்மாவபோதப்ரதம்
ஞ்ரீஞ்ரீ நாயக ஸேவிதே பவதன ப்ரேமாஸ்பதம் பாவயே

இது இரண்டாவது பீஜம் ஞ்ரீம்

உரை—ஞ்ரீம் பீஜமானது — மானஸிக ச்ரமம் (மனதில் ஏற்படக்கூடிய கஷ்டம்) துக்கம், பிறப்பு, இறப்பு என்கிற அலைகள் ரூபமாகிற பிறவிநோயால் ஏற்படும் பயம் (பவரோக பயம்) இவைகளை நாசம் செய்யக்கூடியது.

ம்ருத்யு என்கிற **ச** காரம், க்ரோத என்கிற **ரேபம்,** ஶாந்தியான **ஈம்,** இத்துடன் சேர்ந்த **பிந்து**—இப்படி வர்ணங்களாலான இந்த பீஜம் (சகாரரேபஈகாரபிந்து) லக்ஷ்மி கடாக்ஷத்தை அளிப்பதாகும். தன் உள்ளத்தில் இருக்கின்ற ஆத்மா என்றபாணத்துக்கு லக்ஷியமானதாகும். நாசமில்லாத தேவர்களுக்கு ஆத்மபோதத்தை உண்டு பண்ணுவதாகும். ஶ்ரீலக்ஷ்மியினுலும், லக்ஷமிபதியினாலும் ஸேவிக்கப்படும் வினாயகருக்கு ப்ரியத்துக்கிடமான **ஶ்ரீம்** பீஜத்தை பாவனை செய்கிறேன்.

விளக்கவுரை— ஜீவர்கள் செய்யும் பாபத்தினால் யமனுக்கு இந்த ஜீவர்களிடத்தில் கோபம் ஏற்படுகிறதாம். அதனை இந்த ஶ்ரீம் பீஜம் அதாவது அமிர்தபீஜம் சாந்தப்படுத்துகிறதாம் என்று கவி இதில் மந்த்ர உத்தார வாக்கியத்திலேயே வேறுகருத்தும் புலப்படும் வண்ணம் அமைக்கிறார்.

ம்ருகண்டுவின் புத்திரர் மார்க்கண்டேயரின் வரலாறு யாவரும் அறிந்த ஒன்றுதான். இதில்திருக்கடையூர் க்ஷேத்ரத்தில் தன்வயது 16 முடியும் தருவாயில் இறைவன்கூறிய வாக்கு இதுதான் என்ற உரிமையுடன் ஷோடசாக்ஷரியைக் கோரி பெறுகிறான். இங்கு ஜீவனாக இருந்த மார்க்கண்டன் ஷோடசீ பெற்றதினால் அமிர்த சாகாநிலையடைந்த காரணத்தால் ம்ருத்யுவுக்கு இவனிடத்தில் இருந்த கோபம் தணிகிறது. அவனை அவனின் முன்பு இறைவன் இல்லாமலே ஆக்கி விடுகிறார். இந்த அருள்சத்தியின் அருள் வேளை உணர்வினை முன்பொரு சமயம் ஸத்குருவிடம் தெரிவித்த வேளையில் அவர்கள் மகிழ்ந்துள்ளார்கள். பிற்காலத்தில் அவர்களின் **ம்ருத்யுக்ரோதன சாந்திபிந்து விலஸத்வர்ணம்** என்ற இந்த ஸ்லோக வெளிப்பாடேதான் ஸாதகன் மனதில் இந்த ஸ்லோகம் பார்க்கும் முன்பே ஸ்புரித்து மேற்கண்ட தத்வம் வெளிப்பட்டிருக்கிறது. எனவேதான் ஶ்ரீ குருவும் அவரை ஒருமையுடன் உபாஸிக்கும் ஸத் சிஷ்யனும் ஏகீகரணம் ஆகும் தன்மை என்று சாஸ்த்ரம் புகலும் நிலை இதுதானோ என்று எண்ணத்தோன்றுகிறது.

ஹ்ரீம் பீஜம் ஹ்ருதயத்ரிகோணவிலஸன் மத்யாஸனஸ்தம் ஸதாச
ஆகாசானல வாம லோசன நிசானாதார்த வர்ணாத்மகம்
மாயாகார்ய ஜகத் ப்ரகாசகமுமாரூபம் ஸ்வசத்திப்ரதம்,
மாயாதீத பதப்ரதம் ஹ்ருதி பஜே லோகே ஶ்வரா ராதிதம்

இதுமூன்றாவது பீஜம் ஹ்ரீம்

உரை – இந்த *ஹ்ரீம்* பீஜம் இதயமுக்கோணத்தின் மத்தியில் உள்ள ஆஸனத்தில் ஸதா விளங்கக்கூடியது. (அதனால் இது ஹ்ருல்லேகா ஆகிறது.) ஆகாசமான ஹகாரம், அனல என்கிற ஈம்காரம் நிசாநாத (நிசா = இரவு, நாத = தலைவன் , இரவுத்தலைவன் = சந்திரன்)= பிந்து இந்த (ஹகாரரேப ஈ கார பிந்து) வர்ணங்களோடு கூடியது. மாயையின் செயலான இந்த ஜகத்தை ப்ரகாசிக்கச்செய்கிற உமா என்கிற ஓங்கார வடிவமானது. தனக்கு ஆத்மசக்தியைக் கொடுப்பது, காடாந்த காரரூபமான மாயைக்கு அப்பாற்பட்ட ஸ்வயம் ஜோதியான ப்ரஹ்ம நிலையை அடைவிப்பது. இவ்வாறு உலகத்தெய்வங்களால் ஆராதிக்கப்பட்ட வரை இதயத்தில் பாவிக்கிறேன்.

விளக்கவுரை– முக்குணங்களுக்கு அப்பால் புத்திக் குகையில் விளங்குவதல்லவா பரம்பொருள். இவளே தான் ஹ்ருத்கமலவாஸினியான ஹ்ருல்லேகா. எனவே பரம்பொருளான விக்னேசுவரரும் இதுவே. ஸ்தூல ப்ரணவம் – ஓம். ஸூக்ஷ்ம ப்ரணவம் = ஹ்ரீம், ஓம் = அ+உ+ம், உமா = உ+ம+அ. உமா என்றதே ப்ரணவமான பரம்பொருளாக கேனோபநிஷத்தில் சுட்டப்படுகிறது அறியலாம். மாயாதத்வமே ஜகத்தாக ப்ரகாசிப்பதை இங்கு விளக்குகிறார். ப்ரணவமில்லாத மந்த்ரமில்லாததாலும் ஆராதனைக்கு ப்ரணவம் முதலாக இருப்பதாலும், எல்லாவிதமான தெய்வங்களாலும் ஆராதிக்கப் படுபவராக கூறுகிறார். ஒப்பு. வியதனல லஸத்வாம நேத்ரார்த்த சந்த்ரைர்யுக்தம் – மகரந்த ஸ்தவ ராஜஸ்தோத்ரம்.

**க்லீம் பீஜம் கலிதாதுவத்கலயதாம் ஸர்வேஷ்டதம் தேஹினாம்,
தாத்ருக்ஷ்மாயுத ஶாந்தி பிந்து விலஸத் வர்ணாத்மகம் காமதம்
ஸ்ரீக்ருஷ்ண் ப்ரிய மிந்திராஸூதமனஃ ப்ரீத்யேக ஹேதும் பரம்,
ஹ்ருத்பத்மே கலயே ஸதா கலிஹரம் காலாரி புத்ர ப்ரியம்**

இது நான்காவது பீஜம் க்லீம்

உரை—இந்த **க்லீம்** பீஜமானது கலியுகத்தில் தேஹதாரிகளான மனிதர்களுக்கு ஏற்படும் தோஷத்தைப்போக்கி ஸர்வாபீஷ்டங்களையும் கொடுப்பது. தாத்ரு என்கிற (ப்ரஹ்மா) க காரம் க்ஷ்ம என்கிற ல காரம் (யுத=கூடிய) சாந்தியாகிற ஈ காரம் பிந்துவோடு கூடி ப்ரகாசிக்கக்கூடிய வர்ணத்தோடுகூடி கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடியது. ஸ்ரீக்ருஷ்ணனுக்கு இஷ்டமான லக்ஷ்மி தேவியின் புத்ரனான மன்மதனுடைய மனதுக்கு வெகுப்ரீதியை உண்டுபண்ணுவதில் முக்கிய ஹேதுவானது. ஸமஸ்தபுவனங்களுக்கும் அதீதமானது(பரம்) கலிதோஷங்களை ஹரணம் செய்யும்படியானது. (காலாரியான) ம்ருத்திஞ்ஜய புத்ரனான விநாயகருக்கு ப்ரியமான இதனை ஸதா ஹ்ருதய பத்மத்தில் பாவனை செய்கிறேன்.

விளக்கவுரை— லக்ஷ்மிதேவிக்கு புத்திரர்கள் மூவர். அவர்கள் மன்மதன், என்கிற ஆனந்தன்(ஈம்), சிக்லீதன் (ல), கர்த்தமர் (க)இவர்களின் ஸம்பந்தமான பீஜமே க்லீம் என்று ஆகிறது. இவர்களுக்கு ப்ரீதியை உண்டுபண்ணுவது இது. மன்மத பீஜத்தை குறிப்பிடவந்தவர் – அவர்களின் தகப்பனார் க்ருஷ்ணனை சொன்னதன் காரணம்— க்ருஷ்ண-மந்த்ரத்திலும், விஷ்ணுவினுடைய ஆயுதமான சுதர்சன சக்கரத்தின் மந்திரத்திலும் ப்ரதான பீஜம் **க்லீம்** என்பதை நமக்கு ஸூக்ஷ்மமாக உணர்த்துகிறார்.

க்லௌம் பீஜம் குணரூப நிர்குணபர ப்ரஹ்மாதிசக்தேஃ மஹா
ஹங்காராக்ருதி தண்டினீ ப்ரிய மஜ ஸ்ரீநாதருத்ரேஷ்டதம்
ஸர்வாகர்ஷிணி தேவராஜ புவனார்ணேந்த்வாத்மகம் ஸ்ரீகரம்
சித்தே விக்ன நிவாரணாய கிரிஜா ஜாதப்ரியம் பாவயே

இது ஐந்தாவது பீஜம் *க்ளௌம்*

உரை— இது ஸகுணனான காரிய ரூபப்ரஹ்மாவுக்கு ஜகத் ச்ருஷ்டிக்கு ஆதிசக்தியாயும், நிர்குணனான காரணரூப ப்ரஹ்மாவுக்கு மாயாரூபமான ஆதிசக்தியாகவும் விளங்குவது. மஹா அஹங்கார ரூபமான, வாராஹியாகிற தண்டினிக்கு ப்ரியமானது. (அஜ + ஸ்ரீநாத+ ருத்ர) ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரர்களுக்கு மனோ பீஷ்டசக்தியானது. ஸர்வாகர்ஷிணிசக்தியின் பீஜமான **க காரம்** தேவராஜ என்கிற இந்திரனின் பீஜமான **ல காரம்** புவனா என்கிற **ஔகாரம்** இத்துடன் இந்த்வாத்மகமான பிந்துவோடுகூடிய க்லௌம் ஸம்பத்தைக் கொடுக்கக்கூடியது. கிரிஜா என்கிற அம்பாளின் புத்திரனான விக்னேசுவரருக்கு இஷ்டமான **க்லௌம்** பீஜத்தை ஸமஸ்த விக்னங்களும் போவதற்காக சித்தத்தில் ஸதா பாவிக்கிறேன்.

விளக்கவுரை— ஸர்வாகர்ஷிணி என்றால் எல்லாவற்றையும் தன்னிடம் ஆகர்ஷிக்கக்கூடியது. அதாவது குருத்வாரகர்ஷிணி சக்தி எனப்படும். புவியீர்ப்பு சக்தி. பூமிக்கு இழுக்கும் சக்தி உண்டல்லவா. இது விசேஷ ஸ்புரணம். ச்ருஷ்டிக்கு முதலே இந்த பீஜம் தான் என்பதை உணர்த்துகிறார். மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்கிற 4ன் அந்தக்கரண வ்யாபதியேதான் கணபதி. அதனால் அஹங்காரத்தின் சக்தியான தண்டினியை இங்கு நினைவுபடுத்துவதன் மூலம் கணபதியின் ரஹஸ்யத்தை உள்நிறுத்துகிறார். மேலும், இவர் ஸ்ரீவித்யாதத்வங்களை நன்றாக அறிந்தவரானதால் தேவீ நவாவரண ஆராதனத்தில் 4வது ஆவரணமாக (துரீயத்தில்) அமைந்துள்ள சக்திகளில் மூன்றாவதாக ஸர்வாகர்ஷிணி சக்திக்கு உரிய பீஜம் க காரம். இதனைதான் மந்த்ர உத்தாரத்துக்கு எடுத்துக்கொள்வது இங்கு மிகவும் ஸூக்ஷ்மமான ஸ்புரணமாக இருக்கிறது.

கங்காஸூதம் கந்தமுகோபசாரப்ரியம் க கா ரோஹணபாகினேயம்
கங்காஸூதாத்யம் வரகந்த தத்வ மூலாம்புஜஸ்தம் ஹ்ருதி
பாவயே (அ)ஹம்

இது ஆறாவது ப்ரதான கணபதி பீஜம் க³ம்

உரை— கங்கையின் மைந்தனாயும், கந்தாதி பஞ்சோபசாரங்களில் இஷ்டமானவனும், கருடவாஹனான மஹாவிஷ்ணுவுக்கு மருமான் ஆனவனும், கங்காதேவி புத்ரர்களில் முதல்வன் ஆனவனும், கந்ததன்மாத்ரைக்கு இருப்பிடமான ப்ருத்வீதத்வமான மூலாதார பத்மத்தில் ப்ரஸன்னமாக இருப்பவனுமான விக்னேசுவரனை ஹ்ருதயத்தில் ஸதா பாவனை செய்கிறேன்.

விளக்கவுரை— மூலாதாரத்தில் விளங்கும் பரா வாக்கு ஸுஷும்னாநாடி வழியே மேலெழும்பி ஸஹஸ்ராரத்தில் அமிர்த கங்கையாக ப்ரவாஹமெடுக்கும் தன்மை கம் பீஜத்துக்கு உண்டு என்கிற யோகநிலை வைபவம் கவிக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் மூலாதாரமும், கருடவாஹனம் நினைவு மூலமாக நாதஸந்தான முகமாக பஞ்சோபசாரமும், அமிர்தம் பெருகும் நிலையை கங்கையை நினைவுபடுத்தியும் அமைகிறார்.

★★★

கணபதயே வரகுண நிதயே ஸுரகண பதயே நதஜன ததயே
மணிகண பூஷித சரணயுகாஸ்ரித மலஹரனே சணதே நமஃ

இனி —
6 பீஜங்களுக்கு அடுத்து **கணபதயே** என்கிற பதம் (5வர்ணம்)

உரை — கணங்களுக்கு பதியானவரே, ச்ரேஷ்டமான குணங்களுக்கு நிதி போன்றவரே, (இருப்பிடமானவரே) தேவர்களுக்குத்தலைவரானவரே, பக்த ஜனங்களுடன் கூடினவரே, மணிகணங்களால் அலங்கரிக்கப்பட்ட பாதபத்மங்களை, ஆச்ரயித்தவர்களுடைய தோஷங்களைப் போக்கக்கூடிய ஸமர்த்தரான ஹேபரமாத்மா, உமக்கு நமஸ்காரம்.

வராபயே மோதகமேகதந்தம் கராம்புஜாதைஸ்ஸததம்
தரந்தம்
வராங்கசந்த்ரம் பரபக்திஸாந்த்ரைர் ஜனைர் பஜந்தம் கலயே
ஸதா(அ)ந்தஃ

இதில் கணபதயே வை தொடர்ந்த வர என்ற பதம்

உரை — அவரது நான்கு கைகளில் வரதம், அபயம், மோதகம், ஏகதந்தம் இவைகளை எப்போதும் வைத்துள்ளவர். தலையில் சந்த்ரனை சூடியுள்ளவர். பரபக்தியுடைய ஜனங்களால் ஸதாபஜிக்கப்படுகிறவர். இப்படியான பரமாத்மாவை எப்போதும் உள்ளில் த்யானிக்கிறேன்.

வரதநத ஜனானாம் ஸந்ததம் வக்ரதுண்ட
ஸ்வரமயநிஜகாத்ரஸ்வாத்ம போதைகஹேதோ
கரலஸத ம்ருதாம் பஃ பூர்ணபாத்ராத்ய மஹ்யம்
கரகலஸூத சீக்ரம் தேஹி மத்போத மீட்யம்

இதில் வர வைத்தொடர்ந்த *வரத* என்றபடி

